பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 25 திங்கட்கிழமை (09.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 4

# மன்னார் வளைகுடாப் பகுதியில் எண்ணை அகழ அரசு முஸ்தீபு!

## தமது தாயகக் கனியவளம் சூறையாடப்படும் ஆபத்துக் குறித்துத் தமிழர் தரப்பில் சீற்றம்

கொழும்பு,ஜனவரி9

தமிழர் தாயகத்தின் இதயமாகவும், கேந்திர நிலையமாகவும், பெருமளவு இயற்கைக் கனியவளங்கள் புதைந்து கிடக்கும் இடமாகவும் கருதப்படும் மன்னார் வளைகுடாவில் உள்ள பெற்றோலிய வளங்களை அகழ்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசு முனைப்புடன் மேற்கொள்ளத் தொடங்கியிருக்கின்றது.

இந்தத் திட்டம் - நடவடிக்கை - தமிழர் தரப்பில் பெரும் சீற்றத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச சக்திகளுடன் சேர்ந்து தமிழர் தாயகத்தின் மூலவளத்தைச் சுரண்டி, சூறையாடி, கொள்ளையிடும் சதித் திட்டத்தை சிங்கள அரசு செயற்படுத்துவதாகத் தமிழர் தரப்புக் கருதுகின்றது.

இலங்கை அரசின் இந்தச் செயற்பாடு குறித்து விடுதலைப் புலிகளின் தலைமையும் கோபமுற்றிருப்பதாகத் தெரிகின்றது.

மன்னார் வளைகுடாவில் நிலத்துக்கடியில் இருக்கும் - மதிக்க முடியாத பெறுமதி கொண்ட - கனியவளங்களை அகழ்வதற்கான பொறுப்புகளை வெளிநாட்டு நிறுவனங்களிடம் வழங்குவதற்கான கேள்வி மனுக்களை அரசு வெகுவிரையில் உத்தியோகபூர்வமாகக் கோரவிருக்கிறது.

இவ்வாறான கேள்வி மனுக்கோரலில் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காக அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் முன்னணி நிறுவனங்கள் தயாராகியிருக்கின்றன எனவும், இதன் பொருட்டு அரச உயர்மட்டத்தை அந்த நிறுவனங்கள் நாடியிருக்கின்றன எனவும் மிக நம்பகரமாகத் தெரியவருகிறது.

முன்னதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தான் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் இருதயபுரத்தில் நேற்று இரவு பதற்றம்

மூதூர் பிரதேசத்திலுள்ள இருதயபுரம் இராணுவ முகாம்மீது நேற்று இரவு அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமுற்ற படையினர் தாறுமாறாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இரவு இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களினால் இருதயபுரத்திலிருந்த மக்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகக் கரையோரம் பாதுகாப்பு அதிகரிப்பு

இலங்கையில் பதற்றநிலை தோன்றியிருப்பதால் இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு அகதிகள் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன எனவும், அகதிகள் என்ற போர்வையில் தீவிரவாதிகளும் தமிழகத்திற்குள் ஊடுருவலாம் எனவும் தெரிவித்து தமிழ்நாட்டில் கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஹர்த்தால் இன்றும் நாளையும் தளர்வு

ஐந்து தமிழ் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து கடந்த ஒருவாரகாலமாக திருகோணமலையில் இடம்பெற்று வந்த காலவரையறையற்ற ஹர்த்தால் இன்றும் நாளையும் தளர்த்தப்படுமென்று திருமலை மாவட்ட பொங்கு தமிழ்ச் சமூகம் அறிவித்திருக்கிறது.

இன்று ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெறும் தினம் என்பதாலும் நாளை ஹஜ்ஜுப் பெருநாள் தினம் என்பதாலும் ஹர்த்தால் இவ்வாறு தளர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரண்டு தினங்களிலும் வங்கிகள் மற்றும் வர்த்தக நிலையங்களை மட்டும் திறக்குமாறு கேட்டுக்கொண்டுள்ள பொங்கு தமிழ்ச் சமூகம், அரச அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் தொலைவிடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் இயங்க மாட்டாதென்றும் தெரிவித்திருக்கிறது.

இதேவேளை, திருகோணமலை துறைமுகக் கடலில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தையடுத்து நகரில் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. (க)

## பல்கலை. மாணவர் கூட்டம் பளையில்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் நேற்றிரவு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

அண்மைக் காலமாக யாழ். பல்கலைக்கழகச் சூழலில் காணப்படும் அசாதாரண நிலைமை காரணமாக பல்கலைக்கழக செயற்பாடுகள் மந்தகதியில் இடம்பெற்றுவருகின்றன.

இது தொடர்பான பல முக்கிய முடிவுகள் எடுக்க இருப்பதால் அனைத்துப் பீட மாணவர்களையும், புதுமுக மாணவர்களையும் தவறாது இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வெளிமாவட்ட மாணவர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்கு ஏதுவாகவும், மாணவர்களின் பாதுகாப்புக் கருதியும் இக்கலந்துரையாடல் பளை மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6-13)

## மன்னார் கடலில் இரு சடலங்கள்

மன்னார் எழுத்தூர் பகுதி கடற்கரையில் இருந்து ஆண்கள் இருவரின் சடலங்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்டன.

மன்னார், எழுத்தூர் வீதி, 2ஆம் கட்டைப் பகுதியில் உள்ள இளைஞர் படையணித் திட்டத்திற்கு பின்புறமாகவுள்ள கடற்கரையில் இருந்தே இவ்விரு சடலங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவ்விரு சடலங்களும் இதுவரையும் அடையாளம் காணப்படவில்லை. கடற்றொழிலுக்குச் சென்றவர்களின் சடலங்களாக இவை இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (ஒ-6-352)

## விசேட அதிரடிப்படையின் கைவரிசையே திருமலையில் 5 மாணவர்கள் படுகொலை

### பின்னணியில் கொட்டகதெனியவின் வழிகாட்டல்

கொழும்பு,ஜன.9

இராணுவத்தின் உயரதிகாரிகளுக்கோ சம்பந்தப்பட்ட ஏனையோருக்கோ தெரியாமல் திருகோணமலை நகரின் பாதுகாப்புக்கு என்ற பெயரில் விசேடமாக அனுப்பப்பட்ட ஒரு சப் இன்ஸ்பெக்டர் தலைமையிலான - 24 பேர் கொண்ட - விசேட அதிரடிப்படையினரின் கைவரிசையே திருகோணமலையில் ஐந்து அப்பாவித் தமிழ் மாணவர்களினதும் படுகொலைகள் என இப்போது தகவல்கள் மெல்ல மெல்லக் கசியத் தொடங்கியிருக்கின்றன.

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதும் அவரது பாதுகாப்பு ஆலோசகராக, ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த பிரமுகரும், முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபருமான எச்.எம். பி. டபிள்யூ. கொட்டகதெனிய நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவும் அவரது சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோட்டபாய ராஜபக்ஷவும் இந்திய விஜயத்தை மேற்கொண்டிருக்கையில் -

அந்தச் சந்தர்ப்பத்தை வகையாகப் பயன்படுத்தி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குத் தெரிவிக்காமல் - அவருக்குத் தெரியப்படுத்தாமல் - மேற்படி விசேட அதிரடிப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வெதுப்பக உரிமையாளர் நேற்று பருத்தித்துறையில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஜன.9

பருத்தித்துறை நகரப் பகுதியில் இயங்கும் வெதுப்பகம் ஒன்றின் உரிமையாளர் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் அந்த வெதுப்பகத்தில் வைத்தே சுட்டுக் கொல்லப் பட்டார்.

வெதுப்பகத்தினுள் பாண் தயாரிப்பு வேலையில் ஈடுபட்டிருந்த வேளை இனந்தெரியாத நபர்கள் அவரை வெளியே அழைத்துத் தலையில் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.

பருத்தித்துறை சின்னப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த சின்னராசா இராசையா (வயது 47) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மந்திகை ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

(ஐ-15-70-78-173)

## பொலீஸ் - இராணுவம் இணைந்து பண்டாரவளைப் பகுதியில் தேடுதல்

### 20 தமிழ் இளைஞர்கள் கைது

பதுளை, ஜன.9

விடுதலைப் புலிகள் ஊடுருவியிருக்கலாமெனச் சந்தேகித்து பொலீஸ் மீற்றும் இராணுவத்தைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் பேர் நேற்று பண்டாரவளை தோட்டப்பகுதிகளை சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினர். அதில் சுமார் இருபது தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை ஆறு மணி முதல் பண்டாரவளை பூனாகலை பெருந்தோட்டத்தைச் சேர்ந்த அம்பிலாங்கந்த, செங்கீமூத்துமலை, யூ.ஜி.டிவிஷன் உட்பட்ட ஏழு தோட்டங்களில் இராணுவத்தினரும், பொலீஸாரும் பெரும் தேடுதலை நடத்தினர்.

காலை பத்துமணிவரை நடைபெற்ற இந்தத் தேடுதலில் ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களும், இளைஞர்களும்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

கடல் வலயத் தடைச் சட்டத்தால்

# கடற்றொழில் செய்வதில் பெரும் பாதிப்பு மீனவர் பிள்ளைகள் உணவின்றித் தவிப்பு

## தொண்டு நிறுவனங்கள் உதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன. 9

வலி.தென்மேற்கு - இளவாலை, போயிட்டி, மாரீசன்கூடல், சீந்திப்பந்தல் பகுதிகளைச் சேர்ந்த கடற்பகுதியில் மீன்பிடித்தொழில் மேற்கொள்ளத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் தொழில் இழந்த கடற்றொழிலாளர்களின் பிள்ளைகள் போசாக்கற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் உணவு உட்கொள்ளாத நிலையிலேயே பாடசாலைக்கு வருகின்றனர்.

இவ்வாறு மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை அதிபர் சூ.நோர்பேர்ட் உதயகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது-

எமது பாடசாலை இளவாலை போயிட்டி, மாரீசன்கூடல், சீந்திப்பந்தல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 130இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

இவர்களில் 90 சதவீத மாணவர்கள் மிகவும் களைப்படைந்த நிலையிலும், போசாக்கு இல்லாத நிலையிலுமே பாடசாலைக்கு வருகின்றனர்.

இவர்களது பெற்றோர்களது அடிப்படைத் தொழிலான கடற்றொழில் கடல் வலயத் தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்களால் பிள்ளைகளுக்கு சத்துள்ள உணவுகளை வழங்க முடியவில்லை.

எனவே இவ்வாறு பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்க சர்வதேச தொண்டு நிறுவனங்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்வரவேண்டும் என்றார் அவர்.

(ஒ-6-13-185)

## கோப்பாயில் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் நேற்றுப் பிற்பகல் படையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட 'கிரனேட்' தாக்குதலில் படையினரில் ஒருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். பருத்தித்துறை வீதியில் கோப்பாய்ச் சந்திக்கும் இருபாலைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் உப அலுவலகம் முன்பாக பாதுகாப்புக் கடைமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது 'கிரனேட்' வீசப்பட்டதாகவும் - படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என்றும் கூறப்பட்டது.

படையினர் பதிலுக்கு துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்தும் தடைப்பட்டது. (ஒ-6-7-13)

## கிழக்குக் கடற்பிரதேசத்திலும் மீன் பிடிப்பதற்குக் கட்டுப்பாடு

திருமலை, ஜன.9

திருகோணமலை துறைமுகத்தை அண்டிய கடலில் கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து கிழக்கு மாகாணக் கடலிலும் மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு கடற்படையினர் திடீரெனத் தடை விதித்திருக்கின்றனர்.

இதன்படி, கிழக்கு மாகாணத்தில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பாதுகாப்புத் தரப்பின் முன் அனுமதியைப் பெறவேண்டும். எந்தவித அறிவிப்பையும் செய்யாமல் கடலுக்குச் செல்லக்கூடாதென்றும் அவர்கள் கேட்கப்பட்டிருக்கின்றனராம்.

அத்துடன் பாதுகாப்புத் தரப்பின் அனுமதியுடன் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கடற்படையினர் வழமையாக ரோந்துச் சேவையை நடத்தும் பகுதிகளில் மீன்பிடிக்கக் கூடாதென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

பாதுகாப்புத் தரப்பின் உத்தரவுகளை மீறும் மீனவர்களுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இதேவேளை, திருகோணமலைத் தாக்குதல் சம்பவத்தையடுத்து கடற்படையினர் கிழக்கு மாகாணக் கடலில் பாதுகாப்பை பலப்படுத்தியிருக்கின்றனர். வழமையை விட கூடுதலான ரோந்துச் சேவையைக் கடற்படையினர் நடத்தி வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

வடக்குக்கடலிலும் மீனவர்கள் கடற்றொழில் செய்வதற்குப் படையினர் தடை விதித்திருக்கின்றனர் என்பது தெரிந்ததே. (க-13)

## அல்லாரையில் அடிதடி; ஐவர் காயம்

கொடிகாமம் பகுதியில் காணித் தகராறால் இடம்பெற்றதாகக் கூறப்படும் அடிதடியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் உட்பட ஐவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் கொடிகாமம் அல்லாரைப் பகுதியில் இரு தரப்பினருக்கிடையே முதலில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது என்றும் அது அடிதடியில் முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சுப்பன் சிவராசா (வயது -40) அவரது மனைவி சிவராசா சரஸ்வதி (வயது 32) அவர்களின் பிள்ளைகளான சிவராசா சசிகரன் (வயது 17) சிவராசா திருமாறன் (வயது-13) ஆகியோரும்-சின்னத்தம்பி பசுபதி (வயது-55) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டுள்ளனர்.

(ஒ-6-7-13-14-15-78)

## அசாதாரணச் சூழ்நிலை காரணமாக விடிந்த பின்பே திருவெம்பாவை பூசை

தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக பெரும்பாலான ஆலயங்களில் திருவெம்பாவை பூசை வழிபாடுகள் பொழுது புலர்ந்த பின்னரே இடம்பெறுகின்றன என்று ஆலய நிர்வாகிகள் கூறுகின்றனர்.

திருவெம்பாவை வழிபாட்டுக்காலத்தில் பக்தர்கள் விடியும் முன்னரே நீராடி திருவெம்பாவை பாடல்களைப் பஜனையாகப் பாடியபடி ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்துகொள்வார்கள். உறங்கும் மக்களை இறைவனை வணங்க அழைப்பதாகவே திருவெம்பாவைப் பாடல்கள் அமைந்துள்ளன.

ஆனால், தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையால் விடியும் முன்னர் வீடுகளை விட்டு வீதிகளில் இறங்க மக்கள் அஞ்சுகின்றனர். இதனால் அவர்களால் பாரம்பரிய முறைப்படி திருவெம்பாவை வழிபாட்டில் ஈடுபட முடியாமல் உள்ளதாக ஆலய நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

பக்தர்கள் வரமுடியாத சூழ்நிலையில் பெரும்பாலான ஆலயங்களில் விடிந்த பின்னரே திருவெம்பாவை வழிபாடுகள் இடம்பெறுகின்றன என்று கூறப்படுகிறது. (ஒ-6-7-13)

## இலங்கைக் கடற்படையினர் சுட்டு நான்கு தமிழக மீனவர் படுகாயம்!

இராமேஸ்வரம்,ஜன.9

இந்திய - இலங்கைக் கடல் எல்லையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் 5 பேர்வரை படுகாயமடைந்திருக்கின்றனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

கடலில் பாதுகாப்பு ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் திடீரென இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கைக் கடற்படையினரின் இந்தச் செயலால் அச்சமுற்ற தமிழக மீனவர்கள் நேற்று தமது தொழிலைக் கைவிட்டுக் கரை திரும்பினர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, திருகோணமலைக் கடலில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தையடுத்து தமிழகத்தின் கரையோர மாவட்டங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம், மண்டபம், தங்கச்சிமடம் போன்ற இடங்களில் புதிதாக குடிவந்தவர்கள் பொலீஸாரின் தீவிர விசாரணைக்கு உள்ளாகியிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## ஐரோப்பிய ஒன்றியப் பிரமுகர் வெண்புறா அமைப்புடன் பேச்சு

ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீன் லாம் பேர்ட் அம்மையாரை வெண்புறா அமைப்புப் பிரதிநிதிகள் கடந்த வெள்ளிக்கிழமை லண்டனில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இச்சந்திப்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாக இயக்குநர் ரெஜி, வெண்புறா நிறுவனத்தின் தலைவர் என்.எஸ்.மூர்த்தி, மற்றும் எல்வின் றொட்றிக்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் வடக்கு-கிழக்கில் போரினாலும், ஆழிப்பேரலையாலும் இடம்பெயர்வுக்குள்ளாகி பேரவலத்தை எதிர்நோக்கியுள்ள தமிழர்களின் நிலை குறித்தும் -

யாழ்.குடாநாட்டில் இராணுவ வன்முறைகளால் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டு வரும் பணிகள் பற்றியும் - விளக்கப்பட்டன.

புனர்வாழ்வுக்கழகத்தின் மனிதாபிமானப் பணிகளையும், கண்ணிவெடி அகற்றும் பணிகளையும் ஜீன் லாம்பேர்ட் பாராட்டினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிப்பார் என்று ஜீன் லாம்பேர்ட் உறுதியளித்தார் என்றும் கூறப்பட்டது. (ஒ-13)

## மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் உயிரிழப்பு!

மட்டக்களப்பு,ஜன.9

மட்டக்களப்பு, ஏறாவூரில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வந்தாறு மூலையைச் சேர்ந்தவரான கந்தசாமி சண்முகானந்தன் (வயது - 31) என்பவர் கொல்லப்பட்டார்.

கடைக்குப் பொருள்கள் வாங்கச் சென்ற போதே இவர் கொல்லப்பட்டார் என்று குடும்பத்தினர் கூறினர்.

இதேவேளை, இவர் தம்மீது தாக்குதல் நடத்த முயற்சித்த போதே சுட்டுக்கொல்லப்பட்டார் என்று பொலீஸாரிடம் படையினர் விளக்கமளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

**மூதூரில்**

இதேவேளை, நேற்றிரவு 7.20 மணியளவில் மூதூர் பச்சனூர் பகுதியில் இராணுவ டிரக் மீது இனம்தெரியாதவர்கள் நடத்திய கிரனேட் தாக்குதலில் அதில் பயணித்த இராணுவத்தினர் மூவர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-6-13)

## காலிமுகத்திடல் கடலோரத்தில் கான்ஸ்டபிளின் சடலம் மீட்பு

கொழும்பு,ஜன. 9

கொழும்பு, காலிமுகத்திடல் கடற்கரையோரத்திலிருந்து பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருக்கிறது.

நேற்றுக்காலை காலிமுகத்திடலில் ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் இந்தச் சடலத்தை கண்டுபிடித்தனர். கோட்டை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த முதன் நாயக்க (வயது 45) என்ற கான்ஸ்டபிள் நேற்றுமுன்தினம் முதல் காணாமற் போயிருந்தார்.

இவரே நேற்று சீருடையுடன் சடலமாக மீட்கப்பட்டார். இவர் கொல்லப்பட்டமைக்கான காரணம் என்னவென்று உடனடியாகத் தெரியவில்லை. இவர் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கக் கூடுமென்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கோட்டைப் பொலீஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க)

## அ.பொ.செல்லையாவின் நினைவஞ்சலி நிகழ்வு

பளை மத்திய கல்லூரியின் அதிபராகவும் கொத்தணி அதிபராகவும் கடமையாற்றி அண்மையில் கனடாவில் காலமான அ.பொ.செல்லையாவின் நினைவு நிகழ்வு ஒன்று இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ)

## 20 இளைஞரையும் விடுவிக்கக்கோரி 20ஆயிரம் பேர் வேலை நிறுத்தம்?

பதுளை,ஜன. 9

பண்டாரவளையில் நேற்று இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதலின்போது கைது செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்படாத பட்சத்தில் அதனை ஆட்சேபித்து பதுளை மாவட்டத்திலுள்ள 20 ஆயிரத்திற்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்கள் தொடர் வேலைநிறுத்தத்தில் குதிக்கத் தீர்மானித்திருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை பண்டாரவளையில் இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதலின்போது கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் நேற்று மாலைவரை விடுவிக்கப்படவில்லை. இது பதுளை மாவட்டத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் ஆத்திரத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் இந்த இளைஞர்கள் விடுதலை செய்யப்படாத பட்சத்தில், அதனை வலியுறுத்தியும் இவ்வாறான தேடுதல்கள் மற்றும் கைதுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட இருபதாயிரம் தோட்டத் தொழிலாளர்களை உள்ளடக்கிய பதுளை மாவட்டத்தின் முக்கிய தொழிற்சங்கங்கள் தீர்மானித்திருக்கின்றன என எமது பதுளைச் செய்தியாளர் தெரிவித்தார்.

பண்டாரவளையில் இடம்பெற்ற இவ்வாறான தேடுதல்கள் பதுளையின் ஏனைய தோட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்ற அச்சம் மக்கள் மத்தியில் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## சுப்பிரமணிய சுவாமி பொருமுகிறார்

கொழும்பு,ஜன.9

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்காமல் போனமை தமிழகத்தில் இயங்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுக் குழுக்களுக்கு திருப்தியளித்துள்ளது.

ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி இப்படிப் பொருமியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் இந்திய முறையிலான அதிகாரப் பரவலாக்கலுக்கு உதவாவிட்டால் இலங்கைக்கு இந்தியா உதவக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-13)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# யதார்த்தவாதியாகச் செயற்பட ஜனாதிபதி மஹிந்த தயாரா?

இலங்கைத்தீவு யுத்தத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்த ஆபத்தான காலகட்டத்தில் தென்னிலங்கையில் எழுப்பப்படும் கேள்வி ஒன்றே ஒன்றுதான்.

போர் ஏற்படுவதைத் தவிர்த்து, அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு வழி செய்யும் விதத்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செவ்வனே நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் பற்றிய பேச்சுகளை எப்படி, எவ்வாறு விரைந்து ஆரம்பிக்கலாம் என்பதே அக்கேள்வியாகும்.

இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுகளை மீளத் தொடங்குவதற்கான வழிவகை என்னவென்பதுதான் கேள்வி.

கடந்த நவம்பர் இறுதியில் தமது மாவீரர் தின உரையில், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் , இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறித்துக் குறிப்பிட்ட போது, "அவர் (ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ) ஒரு யதார்த்தவாதி எனக் கருதப்படுகின்றார்.''- என சித்திரித்திருந்தார்.

யதார்த்தவாதி என்று கருதப்படுபவர் யதார்த்தவாதியாகச் செயற்பட்டால் இன்றைய நெருக்கடிக்கு - இக்கட்டுக்கு - தீர்வு கிட்டிவிடும். அதுதான் உண்மை.

இன்றைய யதார்த்த நிலை என்ன?

அமைதிப் பேச்சுகள் - சமாதான முயற்சிகள் - முன்னெடுக்கப்படுவதற்கு முட்டுக்கட்டை போடுபவர்களும், குறுக்காக நிற்பவர்களும் யார்?

இந்த விடயங்களை அடையாளம் கண்டால் - யதார்த்தத்தைப் புரிந்து கொண்டால் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யதார்த்தவாதியாகச் செயற்படுவதில் ஒன்றும் கஷ்டம் இருக்காது.

சமதரப்பாகப் பேச்சுகளில் அரசும், புலிகளும் பங்குபற்ற வேண்டும். அப்படியிருக்கையில் அந்தத் தரப்புகளில் ஒன்று உயர்ந்தது போல, மற்றதற்கு பேசும் இடம் குறித்து முன்நிபந்தனை விதிக்கும் நிலைமை இங்கு ஏற்பட்டது. அதுவே இன்றும் - இப்போதும் - பேச்சுக்குக் குந்தகமாக உருவெடுத்து நிற்கின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

அவ்வாறு பேச்சு இந்த இடத்தில்தான் என்று இலங்கை அரசு நிபந்தனை விதிப்பதற்கு காரணம் யார் என்பதை எந்த யதார்த்தவாதியும் இலகுவாகப் புரிந்து கொள்வர்.

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற பேரினவாத சக்திகளின் சகவாசம்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசை இத்தகைய முன்நிபந்தனைகளைப் போட வைத்தது. அதுவே தமிழர் தரப்பை - புலிகள் தரப்பை - சீற்றத்துக்குள் ஆழ்த்தியிருக்கின்றன.

இவ்வாறு சிங்கள, பௌத்த, மேலாண்மைவாதப் போக்குச் சக்திகளின் பிடியில் - கட்டுப்பாட்டில் - ஆதிக்கத்துக்குள் - சிக்கியிருக்கும் ஓர் அரசுடனும், அதன் தலைவருடனும் அமைதிப் பேச்சு நடத்துவதோ, அந்தப் பேச்சுகளில் விட்டுக் கொடுப்புடன் இருதரப்பும் நடந்து, நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதோ சாத்தியமற்றது என்பது தெட்டத் தெளிவு.

அதனால்தான் அத்தகைய பிடிக்குள் சிக்கி நிற்கும் இந்த அரசுடன் பேச்சு நடக்கும் இடம் குறித்த விடயத்தில் இவ்வளவு கறாராக - விடாப்பிடியாக - உறுதியாக - நிற்கின்றார்கள் விடுதலைப்புலிகள்.

பேச்சு நடக்கும் இடம் தொடர்பாகத் தாம் விடுத்த நிபந்தனையைத் தாமே கைவிட்டு, அனுசரணைப்பணி வகிக்கும் நோர்வேயின் இடத்தில் முதல் சுற்றுப் பேச்சை நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணங்குவாரானால் -

அது, தன்னோடு கூட்டுச் சேர்த்துத் தாம் அரவணைத்து வைத்திருக்கும் பௌத்த, சிங்கள மேலாண்மைவாத சக்திகளிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயாராகிவிட்டார் என்பதை வெளிப்படுத்தும் ஒரு சமாதான சமிக்ஞையாக அமையும்.

அத்தோடு, அது பௌத்த, சிங்கள பேரினவாதிகளுக்கும் அவர்களின் பிடியிலிருந்து விலகி, ஒரு தீர்வைக் காண்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயார் என்ற செய்தியை அவர்களுக்குச் சொல்வதாகவும் - உணர்த்துவதாகவும் - இருக்கும்.

இந்த சமாதான சமிக்ஞையை எதிர்பார்த்துத்தான் மாற்ற முடியாத உறுதியான நிலைப்பாட்டோடு காத்திருக்கிறார்கள் புலிகள்.

இன்றைய நிலையில் இதுதான் யதார்த்தக் களநிலைவரம்.

பேரினவாதிகளின் பிடியிலிருந்து தம்மை விடுவித்து, அமைதி முயற்சிக்குத் தாம் தயார் எனத் தம்மை ஜனாதிபதி மஹிந்த வெளிப்படுத்துவாராயின் பேச்சு உடன் ஆரம்பித்துவிடும்.

இந்த யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டு - தம்மை யதார்த்தவாதி என்பதை நிரூபிக்கும் விதத்தில் - சமாதான சமிக்ஞையை வெளிப்படுத்த அவர் தயாரானால் தற்போதைய நெருக்கடி நிலைக்கு சுமுகத்தீர்வு காணப்பட்டுவிடும்.

யதார்த்தவாதியாகச் செயற்பட ஜனாதிபதி மஹிந்த தயாரா?

# கல்வி நிர்வாக சேவை வகுப்பு I இற்கு நாற்பத்து ஒன்பது பேருக்குப் பதவி உயர்வு

## இவர்களில் 20 பேர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்

கொழும்பு,ஜன.9

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் வகுப்பு ஒன்றுக்கு 49 பேருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் 20 பேர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றபின்னர் இந்தப் பதவி உயர்வுவைப் பெற்றுள்ளனர்.

கல்வியமைச்சில் கடந்த வாரம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில், பதவி உயர்வு குறித்த கடிதங்கள் கல்வி அமைச்சரால் உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து வருடங்களாக இந்தப் பதவி உயர்வு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டு வந்த முறைப்பாடுகளை அடுத்து கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த எடுத்த நடவடிக்கையின் பிரகாரம், இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.


பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களில் எட்டுத் தமிழர்களும் அடங்குவர். அவர்களில் இருவர் மட்டும் தற்போது சேவையில் உள்ளனர். ஏனையோர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளனர்.

மொஹமட் தம்பி, கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை (முன்னாள் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்), எம்.பரம்சோதி (கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர்), எஸ்.சிவராசா (முன்னாள் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்), திருமதி எஸ்.இராமகிருஷ்ணா (ஆசிரிய கலாசாலைப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர்), எஸ்.பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற பின்னர்ஒப்பந்த அடிப்படையில் மாகாணக் கல்வி அமைச்சில் பணியாற்றுபவர்), ஏ. அலியார், அருள் அன்னராஜா ஆகியோரே இவ்வாறு பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு ஒன்றில் சித்தியடைந்தவர்களைக் கொண்ட ஆளணி நிலை 200 இற்கு மேல் உள்ளது என்றும் -

அதில் 34 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர் என்றும் - அங்கு தெரிவித்த கல்வி அமைச்சர், பதவி உயர்வு பெற்றவர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள இணைக்க விரும்புகிறேன் என்று கூறினார்.

எனவே, மீண்டும் சேவையில் இணைய விரும்புபவர்களை விண்ணப்பங்களைக் கையளிக்கும் படியும் ஏற்ற இடங்களில் மீள் நியமனம் வழங்கப்படும் என்றும் - கல்வி அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்தார். (எ-3)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் திருவாதிரை உற்சவப் பெருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது. உற்சவத்தின் முதல் நாளன்று சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் விநாயகர், முருகனுடன் இரண்டாம் வீதியில் திரு வீதி உலா வருவதைப் படத்தில் காணலாம். (படம்:காரைநகர் செய்தியாளர்)

# காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக்கு 39 அடி உயரமான சித்திரத் தேர்

## நாளை காலை வெள்ளோட்ட விழா

காரைநகர்,ஜன.9

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஜனா சிற்பக் கலைக்கூட சிற்பாசாரியார் ஜெயகாந்தன் தலைமையில் ஈழத்து, இந்திய சிற்பாசாரிகள் ஒன்றிணைந்து இந்த சித்திரத் தேரை வடிவமைத்துள்ளனர். 39 அடி உயரம் கொண்டதாக இந்த சித்திரத் தேர் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேரில் ஈழத்துச் சிதம்பர ஆலய வரலாறு, நடராஜப் பெருமானின் 108 தாண்டவங்கள், 64 திருவிளையாடல்கள், 25 மகேஸ்வர வடிவங்கள், என்பன சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் -

சிதம்பரம், திருவாரூர், திருவெண்ணாமலை போன்ற சிவத் தலங்களின் தோற்றம் மற்றும் புராண, இதிகாச வரலாறு உட்பட 300 இற்கும் அதிகமான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளதுடன், தங்கக் கலசம், ஆயிரத்து எட்டு மணிகள் என்பனவும் இந்தத் தேரில் பொருத்தப்பட்டுள்ளன.

ஒரு கோடி இருபது இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்தத் தேரில் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள தேர்த் திருவிழாவின் போது நடராஜப் பெருமான் பவனிவரவுள்ளார்.

இதேவேளை, ஈழத்துச் சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள ஐயனாருக்கான புதிய சிற்பத் தேருக்கான கால்கோல் விழா எதிர்வரும் 14ஆம் திகதி தைப் பொங்கல் தினத்தன்று இடம்பெறவுள்ளது. (எ-73)

**நாளை**

மார்கழி 26
செவ்வாய்க்கிழமை
10.01.2006
திதி: ஏகாதசி
பிற்பகல் 01.34 வரை
நட்சத்திரம் : கார்த்திகை
மாலை 05.18 வரை
சுபநேரம் : 11.03 - 12.33
ராகுகாலம் : 03.33 - 05.03
(யாவும் பழைய நேரப்படி)

# கட்டிய வெள்ளைக்கொடிகளை அகற்றக் கோரினர் படையினர்

யாழ்ப்பாணம்,ஜன.9

பருத்தித்துறை வீதியில் சில இடங்களில் கடைகள் மற்றும் வீடுகளின் முன்பாக வெள்ளைக் கொடிகளைக் கட்டுமாறு உத்தரவிட்டிருந்த இராணுவத்தினர் தற்போது அவற்றை அகற்றுமாறு பொதுமக்களிடம் கேட்டிருக்கின்றனர்.

பருத்தித்துறை வீதியில் நல்லூர், கல்வியங்காடு, இருபாலைப் பகுதிகளில் வீதியோரம் கட்டடங்கள், கடைகள், வீடுகள், முன்பாகக் கட்டப்பட்டிருந்த வெள்ளைக் கொடிகளைத் தற்போது அகற்றுமாறு பணிக்கப்பட்டிருக்கிறது.

இராணுவத்தினரின் வற்புறுத்தலின் பேரில் கட்டப்பட்ட இந்தக் கொடிகள் நேற்றுமுன்தினம் முதல் அகற்றப்பட்டிருக்கின்றன.

இப்பகுதிகளில் வெள்ளைக் கொடிகளைக் கட்டுமாறு பொதுமக்கள் வற்புறுத்தப்பட்டமை தொடர்பாக யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் படை உயர் அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டிருந்ததும் -

அவ்வாறு கொடிகளைக் கட்டுமாறு படைத் தலைமைப்பீடத்திலிருந்து இராணுவத்தினருக்குப் பணிப்புரை ஏதும் விடுக்கப்படவில்லை என்று படை அதிகாரிகள் நீதிவானிடம் கூறியிருந்தனர் என்பதும் தெரிந்தவையே. (ஐ-7)

**உதயவாக்கு**

வீழ்ச்சியுறாமல் இருப்பதில் அல்ல எமது பெருமை தங்கியுள்ளது; வீழ்ச்சியுறும் ஒவ்வொரு தடவையும் மிடுக்குடன் எழுந்திருப்பதில்தான்.
- ஒலிவர் கோல்ட் ஸ்மித்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1980 முதல் 1990 வரை பளை மகாவித்தியாலயத்தை அலங்கரித்த பொற்கால நாயகன் அ.பொ.செல்லையா அவர்களின் 31 ஆம் நாள் கண்ணீரிப் பூக்கள்

## பகுத்தறிவாளனாகக் காலத்தைக் கழித்தவர்

திரு அ.பொ. செ. அவர்கள் தமிழின் கரைகண்ட ஒரு மூதறிஞர். பச்சையப்பன் கல்லூரியில் B.Sc. பட்டப்படிப்பை முடித்த இவர் தமிழ் மொழியிலும் சாலச்சிறந்த புலமைபெற்றார். சிறந்த பேச்சாளன், எழுத்தாளன், நாடகநடிகன் அடுக்கு மொழி வல்லவன் என எல்லோராலும் புகழ்ந்து கூறப்பட்டார். அண்ணாவின் வழிவந்த அ.பொ.செ. அவர்கள் கறுப்பு வெள்ளைச் சீருடையுடன் எளிமையாகக் தோற்ற மளிப்பவர். நினைத்ததை முடிக்கும் வல்லமை படைத்தவர். பத்து வருடங்களுக்கு மேல் அவர் புகழ் பளைப் பிரதேசத்தில் பரவியது. எங்கு பார்த்தாலும் அவரது வழிவந்த மாணவர்கள் மிளிர்வதைக் காணமுடிகின்றது. வைத்தியத் துறைக்கு பளைப் பிரதேசத்திலிருந்து முதல் மாணவனை அனுப்பிய பெருமை அ.பொ.செ.யையேசாரும். அவரது காலம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட காலம். திருக்குறளைப் பாமர மக்களும் பயிலக்கூடிய வகையில் எளிய மொழிநடையில் ஆக்கி, கனேடிய அரசின் புகழைப் பெற்றவர். தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் அருந்தொண்டாற்றி தனது இறுதிப் பயணத்தை கனடா நகரில் முடித்துக் கொண்டார்.

இவ்வேளையில் அவரது பணியை மனதிருத்தி அவரது ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திரு ப. அரியரத்தினம்
வலயக்கல்விப்பணிப்பாளர்,முல்லைத்தீவு

## பல்துறை அறிஞர்

தென்மராட்சியில் உதித்த அ.பொ.செ.அவர்கள் பல்துறைகளிலே பாண்டித்தியம் பெற்ற அறிஞர் . இவர் நல்ல ஆசிரியனாக, அதிபராக, எழுத்தாளராக, நடிகனாக, சமூகவேவையாளனாக தாயகத்தில் வசித்துள்ளார்.இவர் பளை ம.வி.யை உயர்த்திய அதிபர்.தனது தற்துணிவால் உயர்தர விஞ்ஞானப்பிரிவை ஆரம்பித்து மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும் உருவாக்கினார். அவர் காலத்தில் கற்ற பத்து மாணவர்கள் இன்று பளைக் கோட்டப் பாடசாலைகளில் அதிபராக இருக்கின்றார்கள் என்பதைப் பெருமையுடன் கூற முடியும். நான் அப்பாடசாலையில் அதிபராக பின்னர் இருந்தவன் என்ற வகையில் இதைக் குறிப்பிடுகின்றேன்.

அ.பொ.செ. இன்முகத்தோடு வரவேற்கும் பாணியும் ஆலோசனை கூறுகின்ற பண்பும் ஆழ்ந்த புலமையும் அவரது உடையும் நடையும் கண்முன்னே நிற்கின்றன. அவர் மீண்டும் கனடாவில் இருந்து வந்து தாய் மண்ணுக்குத் தமிழ் பரப்புவார் என நினைத்தோம். அவரது இழப்பு தமிழ் சமூகத்திற்குப் பேரிழப்பாகும். அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

அ.கயிலாயபிள்ளை,அதிபர்.
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

## அண்ணாவழி வந்த ஆசிரியன்

ஏ.பி. செல்லையா அவர்கள் ஒர் ஆசிரியன் - கல்விச் சேவையாளன்- சமூகதொண்டன்- கலைஞன்- அண்ணாவழி வந்த எழுத்தாளன்.

இத்தனையும் அவரின் பெயரையும் புகழையும் உலகம் அழியும் வரை எடுத்துரைத்துக் கொண்டு நிற்கும் சிறப்பு அம்சங்கள் என்றால் முகஸ்துதியல்ல. அவரை அறிந்த அத்தகைய பெருமைக்கு உரியவரைப்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்வதில் பெருமையடைய வேண்டியவர்கள் நாம்.சமூகத் தொண்டை உயிர் மூச்சாக்கி கல்வியின் உச்சத்தினை உன் மாணவர்களும் அடைந்தாகவேண்டும் என்ற உணர்வினால் உன்னை நீ வேராக்கி அவர்களைக் கல்விச் செடிகளாக்கி வளர்த்தவனே- அரிய பெரிய கல்வித் தொண்டு ஆற்றியோனே- மாணவர்களின் நாடி நரம்பெல்லாம் பரப்பிவைத்த சத்தியோனே!

எப்படி மறந்திடலாம் உன் நினைவை !
மறக்கத்தான் முடிந்திடுமோ உன் பெயரை!!

எத்தனை மாணவர்கள் உன் அயரா முயற்சியால் பல்கலைக்கழக அனுமதி பெற்றார்கள்- உன் பெயரைத்தத்தம் மனதில் ஏற்றியேந்தி மகிழ்ந்தார்கள்.

இதுமட்டுமா உன் தொண்டு!இன்னும் அவை நிறையவுண்டு.

கலையையும் இலக்கியத்தையும் உன் உயிர் நாடியாக்கினாய் எழுத்துலகில் புகுந்தாய். அறிஞர் அண்ணா வழியைத் தேர்ந்தெடுத்தாய்- பலநூல்களை எழுதித்தந்தாய். உன் தொண்டு - உன் சிறப்பு பல்வேறு பல்வேறு, பார்ப்போரின் மனதிலெல்லாம் ஒரே கண்ணூறு. கண்ணூறு வந்துதானா கடவுளுன்னைக் கவர்ந்தெடுத்தார். - எண்ணூறு கோடி தேவர் உந்தனையும் தம்மருகில் இருத்திவிட்டார். உன் மறைவை எண்ணியெண்ணி ஆறாத்துயரடைந்து அழுகிறோம். அன்பனே! எல்லோருக்கும் இனியவனே! எங்கள் உள்ளத்தில் வந்தடைந்த அந்தத்துயர் மாறாது! மாறாது!!

கூ.தெய்வேந்திரன், உதவி ஆணையாளர்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம், வவுனியா.

## வாழ்ந்து வழிகாட்டியவர்

1980 களில் பளை ம.வி. அதிபராகக் கடமையேற்ற அ.பொ. செ. நிமிர்ந்த நடையுடன், மலர்ந்த முகத்துடன் கூடிய எளிமையான தோற்றத்தைக்கொண்டவர். சமூகத்திற்கான முன்மாதிரியான கருத்துக்களை முன்வைத்தவர். க.பொ.த.உ.த வகுப்புக்களை இப்பாடசாலையில் ஆரம்பித்து பல மாணவர்களைப் பல்கலைக்கழகம் புக காலாக இருந்தவர்.

எமது பாடசாலையிலிருந்து முதல் மருத்துவனாக கி.சிவஞானன் உருவாக்கப்பட்டார். அதைத்தொடர்ந்து பல மருத்துவர்களும், பல பட்டதாரிகளும் அவரது காலத்தினர் என்பது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும். எமது பாடசாலையின் விழுதுகள் கல்வி மணம் பரப்பி நிற்கும் காட்சியைக் கண்டு பூரிப்படையக் காரணமான உத்தமரை இந்நாளில் நானும் பளைவாழ் சமூகமும் மிகவும் நன்றியுணர்வோடு நினைவு கூருகின்றோம்.

சி.இராமலிங்கம்
கோட்டக்கல்வி அலுவலர்,பளை



அ.பொ.செல்லையா
B.Sc. Dip.in Edu., S.L.P.S-I

பிறப்பு 19.01.1937 இறப்பு 10.12.2005

## முத்தமிழ் வளர்த்த வித்தகர்

வரலாறு கூறும் தமிழன் வரிசையில் தென்னவன் என்றழைக்கப்படும் மீசாலையூர் பொன்னையா நல்லம்மா தம்பதியரின் அருந்தவத்தால் வந்துதித்த அண்ணல் அ.பொ. செல்லையா அவர்கள் ஆரம்பக்கல்வியை மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் கற்று.தமிழின் சிறப்பையும், பெருமையையும், வித்துவான் மு. சபாரட்ணம் ஆசிரியரிடம் நன்கு கற்று உயர் கல்வியை விஞ்ஞானத்துறையில் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்றார். முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களையும் யாத்து தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார். அதிபராக பளை ம.வி., மட்டுவில் ம.வி., வீரசிங்கம் ம.வியிலும் சேவையாற்றி 20.01.1997 இல் இளைப்பாறினார்.

அ.பொ.செ. அவர்கள் ஈழத்தில் மட்டுமல்ல கனடாவிலும் தமிழ்த்தொண்டு புரிந்தார். முத்தமிழ் வளர்த்த வித்தகர் அவர்கள் கனடாவில் காலமானதையிட்டு அஞ்சலிப் பூச்சரங்களை அன்னாரின் ஆத்மாவிற்கு அர்ப்பணம் செய்கிறேன்.

க. உதயகுமாரன்,
பழையமாணவன்.

## புகழ் சேர்த்த தலைமகன்

தோன்றில் புகழுடன் தோன்றுக அதிலார்
தோன்றில் தோன்றாமை நன்று.

அ.பொ. செ. அவர்கள் வாழ்நாள் முழுவதும் பொதுவுடமைக்கொள்கை வழுவாது வாழ்ந்தவர். திராவிடக்கழகத்திலே இணைந்து செயலாற்றினார். தந்தை பெரியார் வழி ஒழுகி நாடகநூல்கள் பலவற்றை எழுதி நடித்துப் புகழ்பெற்றார். இவர் பளை.ம.வியில் அதிபராகப்பணி புரிந்து கல்வியை உயர்த்தியபெருமகன். ஒர் இமாலயத்துக்கான கல்வியில் பின்தங்கி விளங்கிய பளையின் கல்வி நிலையை உயர்த்தினார். அ.பொ. செ. ஆளுமைமிக்க தலைவன், நம் மத்தியில் இருந்து மறைந்தது பேரிழப்பாகும். அன்னாரது குடும்பத்திற்கு எமது பளைப் பிரதேச மக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைவெளிப்படுத்துகின்றேன்.

திரு.ம. குமாரவேலு - J.P.
புலோப்பளை, பளை.

ஒரு மாணவனின் நினைவிலிருந்து.......
வெள்ளை மேற்சட்டை, கறுத்தக் காற்சட்டை
முகத்தில் புன்னகை, வாயில்தமிழ் உற்சாக நடை
இதுவே அதிபரின் குறியீடுகள்.
நான் இப்போது ஒரு மருத்துவன்
அதிலும் மருத்துவ நிர்வாகத்துறையில்
முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளேன்
என்னால் இப்போது நன்றாக உணர முடிகிறது
அதிபராய்
அவர் என்ன செய்தார் என்று.
He had the Vision.
அவரிடம் தரிசனம் தூரநோக்கு இருந்தது.
அதை அவர் நடைமுறையில் கைக்கொண்டார்
நான் அவரின் மாணவன்
அவ்வாறே நான் அவரின் முரணாளி
பல தடவை கருத்துக்களால் நாங்கள்
மோதிக்கொண்டோம். ஆயினும்
எனக்கு இப்போது மிக நன்றாகப்
புரிகிறது. ஒர் அதிபராய் இருப்பதன் சுமை,
அதைவிடவும் அந்த சிரித்த முகத்தின்
தலைமைத்துவப் பண்பை..
நிஜமாய் இன்னும் பலகாலம்
என்னால் பார்க்க முடியாதிருக்கும்
அவ்வாறானதொரு மனிதரை.

Dr.K.Sivagnanan
(MBBS,Msc,M.D. Admin.)

அஞ்சலியிதழ் தொகுப்பு: க. உதயகுமாரன்

வெளியீடு:- பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், கிளி/ பளை மத்திய கல்லூரி.

## அழகு தமிழ் வேந்தன்

சென்னைப் பட்டினத்தின் புகழ் பூத்த பச்சையப்பன் கல்லூரியிலே விஞ்ஞானப் பட்டதாரியாகக் கற்றுத் தேர்ந்த போதிலும் தமிழின் பால் உள்ள பற்றால் எம் மத்தியில் கல்விப்பணியினைத் தமது அழகுமொழியில் மேடைகளை அலங்கரித்தார்.இவரது தமிழ்ப் புலமையினால் கவரப்பட்ட பல மாணவர்கள் எப்பொழுதிலும் இவரையே பின்பற்றினர்.

'A.P' எனச் செல்லமாக அழைக்கப்படும் இவர் அறிவிப்பாளராகக் கடமையாற்றி பலரது பாராட்டுக்களையும் பெற்றவர். ஒரு தசாப்த காலமாக பளைப் பிரதேசத்தின் கல்வி விடிவிற்கு கால்கோளாக அமைந்தவர். இவரது மாணவர்கள் கல்விப்பணியைத் தங்கள் நெஞ்சினிலே நிலை நிறுத்தி அவருடைய செயலாற்றுகையை எமக்கு எடுத்து இயம்பும்போது அவருடைய கல்விச் சேவையையிட்டு பெருமிதம் அடைகின்றேன். அன்னாரின் நினைவாக நாம் இன்று நடத்தும் அஞ்சலி நிகழ்ச்சி ஊடாகப் பளைப் பிரதேச கல்விச் சமூகம் அவரது கல்விப்பணியை மறையாது காத்துக்கொள்ள வேண்டும்.

த.குருகுலராஜா
வலயக்கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.

## செயற்றிறன் மிக்க அதிபர்

அதிபர் அ.பொ.செ. அவர்கள் பளை மத்திய கல்லூரியின் ஆணிவேராக எல்லோரினது மனதிலும் இடம்பிடித்துள்ளார் என்பது இன்றைய இதய அஞ்சலியின் பிரதிபலிப்பு.

சொல்லிலும் செயலும் ஒருங்கே அமைந்த செயல்வீரன். கல்லூரிக்கு உரமூட்டி, உயிர்கொடுத்த உத்தமன். இவர் வழி வந்த மாணவர்கள் அனைவரது நடத்தைக்கோலங்கள் அவரின் பண்பாட்டு விழுமியங்களை எடுத்துக்காட்டுகின்றது.கற்றல் செயற்பாட்டுக்குரிய சூழலாக கல்லூரியை எழில் மிக்கதாய் ஆக்கியவர். அவர் காலத்தில் உயர்கல்வித்துறைக்கு அதிக மாணவர்கள் சென்று இன்று உயர் பதவிகளை வகிக்கிறார்கள். அவர் காலத்தில் பளை ம.வி. பல சாதனைகளைப் படைத்தது கண்கூடு. அன்னாரின் மறைவு ஆறாத் துயர் உடையது. ஆண்டவன் மீண்டும் ஒருமுறை இவரைப் படைக்க மாட்டானா!

என் இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றேன்.

க.குணபாலசிங்கம் அதிபர்,
கிளி/ பளை மத்தியக் கல்லூரி.

## முதன்மைமிக்க வழிகாட்டி

எனது வாழ்வில் முதன்மைமிக்க வழிகாட்டியாக விளங்கிய அ.பொ.செ. அவர்கள் சிறந்த ஆளுமைமிக்க அதிபர். பளை ம.வியை உயர் கல்விக்கூடமாக மிளிரச்செய்தவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை நிலைநாட்டிய கர்மவீரன். ஏழைகளின் பங்காளன், அழகுதமிழ்ப் பேச்சாளன், இயற்கை நேசன். ஆதரவற்றவர்களுக்கு அடைக்கலம் தந்த அநாதரட்சகன்.

பாடசாலையில் முதலாவது ஆளாகவும் கடைசி ஆளாகவும் காட்சியளிப்பது இவரே. கடும் சொல்பேசாதவர், கருணையின் வடிவமானவர். அறிவியற் கருத்துகள் சொன்ன அதிபர். ஒவ்வோர் ஆசிரியர், மாணவரது குடும்பத்தின் நன்மை தீமைகளில் கலந்து கொள்பவர்.அவரால் பளையில் வளர்க்கப்பட்ட என்னைப்போன்றவர்கள் அதிபர்களாக, விரிவுரையாளர்களாக விளங்குவதும் இன்று அவர் கொலுவிருந்த ஆசனத்தை அவரது மாணவன் அலங்கரிப்பதும் பெருமைக்குரியதே! வாழ்வுதந்த உத்தமர் எந்தை அ.பொ.செ. அவர்களின் திருவடி தொழுது அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அதிபர்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

## பொற்கால நாயகன்

1980 மே மாதம் கறுப்பு வெள்ளை ஆடைக்குள் ஒர் அழகுதமிழ் நம் காதோரம் தன் கடமையேற்பு உரையை ஆற்றியது. பளை ம.வியை அ.பொ.செ. உள்வாங்கினாரா, அல்லது அவரை பளை ம.வி. உள்வாங்கியதோ? அன்று தொடங்கிய அன்னாரது ஆளுமை விதைப்பு பச்சிலைப்பள்ளி பிரதேசம் எங்கும் ஆழவேருன்றியது, அகல ஒளியேற்றியது, கூர்மையாக குடிகொண்டது.

சொல்லும் செயலும் ஒன்றென வாழ்ந்து வழிகாட்டியவர். சாவல்களைத் தன் கனிவான பேச்சால் செயலால் சாதித்தவர். "பதைவரைக் குறை" எனும் தாரக மந்திரம் கொண்டு பழியெல்லாம் வென்றவர். கல்லூரி வளவை தன் பல் துறைச் செயற்பாடுகளால் பல்கலைபயிலும் அரிய வளாகமாக்கிய ஆற்றலாளன்.

பளை ம.வியின் வரலாற்றில் 1980 - 1990 இடையிலான பத்து ஆண்டுகளை பொற்காலமாக்கிய தலைமகன்.என்னோடு பயின்ற மாணவ சமுதாயம் இன்றுநல்ல நிலையில் இருந்துநல்லதை நினைக்க, சொல்ல, செய்ய நமக்கெல்லாம் குருவாய் வழிகாட்டிய நம் இதயத் தெய்வம். அ.பொ.செ. அவர்கள் கடந்த 10.12.2005 இல் கனடா நாட்டில் காலமான செய்தி எம் காதோரம் வந்தபோது எம் இதயத் துடிப்பே அதிர்ந்துபோனது.எம்கடன் அவர்தம் எண்ணம் சுமந்து பணிசெய்வதே எனக்கூறி வணக்கம் செய்கின்றேன்.

க.சுந்தரலிங்கம்,
பழைய மாணவர்,

## கல்விக்கு வழிகாட்டியவர்

உடல் மறைந்தாலும் பளை வாழ் மக்கள் மத்தியில் உயிர் வாழும் மதிப்புக்குரிய எமது முன்னாள் கல்லூரி அதிபர் அ.பொ. செல்லையா அவர்களது சேவையானது என்னையும் என்போன்றோரையும் சமூகத்தில், சமூகத்தைப்பொறுப்பேற்று பிரதிநிதிப்படுத்தக் கூடிய விதத்தில் உயர்த்தியமைக்குக் காலாக அமைந்தவர். அத்தகைய சிறந்த சேவையை எமது கல்விக் காலத்தில் வழங்கி தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொண்ட அன்னாரது ஆத்மா சாந்தியடைய இந்நாளில் பிரார்த்திக்கின்றேன்.

இ.ஞானகலாதீபன்,
பொறியியலாளர், மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.

(C/47219)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகள் எவையும் சீரில்லை; இந்த நிலையில் அபிவிருத்திப் பணிகளை எப்படிச் செய்வது?

## முல்லைத்தீவு நிலை குறித்து அரச அதிபர்

புதுக்குடியிருப்பு, ஜன.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீதிகள் எவையும் சீரானவையாக இல்லை. இந்த நிலையில் அபிவிருத்திப் பணிகள் எவ்வாறு மேற்கொள்ளமுடியும் என்று விசனத்துடன் கேள்வி எழுப்பினார் மாவட்ட அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலைமை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கும் ஆழிப்பேரலை மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கும் போக்குவரத்து இன்றியமையாதது. ஆனால், மாவட்டத்தின் சகல வீதிகளும் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளன. பெரும் பிரயத்தனத்தின் மத்தியில்தான் பயணங்கள் நடைபெறுகின்றது.

இதனால்தான் கட்டுமானப் பணிகளுக்கு இங்கு ஒப்பந்தகாரர்கள் வருவதற்கு பின்னடிக்கின்றனர்.

கட்டுமானப் பணிகளுக்காக பொருள்களைத் தென்பகுதியில் இருந்தே எடுத்துவர வேண்டும். அங்கிருந்து பொருள்களை எடுத்துவரபோக்குவரத்து கூலி அதிகம். அத்துடன், அங்கிருந்து வரும் பார ஊர்திகள் உடன் திரும்ப முடியாமல் உள்ளன. அப்படித் திரும்புவதானால் சோதனைச் சாவடி மூடுவதற்குமுன் செல்லவேண்டும். வேகமாக செல்ல வீதிகள் சீரில்லை.போக்குவரத்துக்கு பெருந்தொகை பணம் விரையமாகிறது.

அத்துடன், போதுமான தொலைத் தொடர்பு வசதிகளும் இங்கு இல்லை. உடனுக்குடன் தகவல்களை பரிமாறமுடியாது.

சில வீதிகள் முற்றாக போக்குவரத்துச் செய்ய முடியாமல் உள்ளன. புதுக்குடியிருப்பு, கெப்புலவு வீதிகளில் இன்றுவரை போக்குவரத்து செய்யமுடியாமல் உள்ளது. மாற்றாக வேறு வீதிகளைப் பயன்படுத்துவதானால் பல மைல் தூரம் சுற்றவேண்டும்.அதற்கு மேலதிகமாக பணமும் நேரமும் செலவாகிறது. இதனால் உள்ளூர் ஒப்பந்தகாரர்கள் பல சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர். எனவே, மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் துரிதமாக நடக்கவேண்டும் என்றால் முதலில் வீதிகள் செப்பனிடப்படுவது அவசியம் என்றார் அரச அதிபர். (த-353)

# கிளிநொச்சியில் பரவலாக அரசியல் கருத்தரங்குகள்

கிளிநொச்சி, ஜன.9

கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாக சமகால அரசியல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் கடந்த 3 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இக்கருத்தரங்கு கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி தலைமையில் நடைபெற்றது. இதில் கருத்துரையினை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணனும் சிறப்புரையினை 'விடுதலைப் புலிகள்' ஏட்டின் ஆசிரியர் ரவியும் நிகழ்த்தினர்.

இக்கருத்தரங்கு கிளிநொச்சி அரச அதிபர் ஆர்.இராசநாயகம், அரச செயலக உத்தியோகத்தர்களும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர்களும் கலந்துகொண்டனர்.

4ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் அருள் தலைமையில் சமகால அரசியல் கருத்தரங்கு நடைபெற்றது.இது விடுதலைப் புலிகளின் முக்கிய [illegible]றுப்பினர் கா.வே.பாலகுமாரன், தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன், கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் நாகேஸ் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

இக்கருத்தரங்குகளில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(த-6-405-352)

# சூழல் விழிப்புணர்வு

புதுக்குடியிருப்பு,ஜன.9

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றது.

'றீடோ' மற்றும் 'ஒக்ஸ்பாம்' நிறுவனங்கள் இணைந்து சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் குறித்து வீடு வீடாகச் சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திவருகின்றன.

சேரன் நிறுவனத்தினரால் சுற்றுச்சூழல் தொடர்பான பதாகைகள் ஆங்காங்கே தொங்கவிடப்பட்டுள்ளன.

(த-6- 353)


# முல்லை. மாவட்ட அதிபர்களுக்கு உள்ளக இடமாற்றம்

முல்லை. மாவட்டத்தில் உள்ள பாடசாலை அதிபர்களுக்கு உள்ளக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு பாடசாலையில் தொடர்ந்து பணியாற்றும் அதிபர்களுக்கே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

முல்லை. வலயத்தில் 6 அதிபர்களும், துணுக்காய் வலய அதிபர்களும் அந்தந்த வலயங்களில் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(த-353)



மன்னார் வீதியில் 19 ஆம் கட்டைக்கும் நாச்சிக்குடா சந்திக்கும் இடையில் உள்ள பாரிய குழிகளையே படங்களில் காண்கிறீர்கள்.மழை காலத்தில் இந்த வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

# முழங்காவில் பிரிவில் உள்ள வறிய குடும்பங்களுக்கு உதவி

வெள்ளாம்குளம், ஜன.9

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முழங்காவில் கிராம சேவையாளர் பிரிவில் பெண்களைத் தலைமையாகக் கொண்ட சிறுவர்கள் உள்ள குடும்பங்களுக்கும் வறிய பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் வாழ்வாதார உதவித் தொகை வழங்கியுள்ளது.

பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவன அனுசரணையுடன் இப்பகுதியில் 38 குடும்பங்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபா வீதம் வருமான அதிகரிப்பு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

முதல் கட்ட உதவித் தொகையாக 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (த-415)

# விளையாட்டுக் கழகங்களுக்கு சீருடை வழங்கியது இளையோர் நிறுவனம்

மாவீரர் நினைவாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டப்போட்டியில் கலந்து கொண்ட 18 விளையாட்டுக்கழக அங்கத்தவர்களுக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினரால் சீருடைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கடந்த 2ஆம் திகதி புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இளையோர் செயற்பாட்டு நிறுவன நிதி இணைப்பாளர் கமல், முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் நிலான் ஆகியோர் இந்த நிகழ்வில் கருத்துரைகள் வழங்கினர்.

(த-6-203)

# ஒட்டுசுட்டானில் உரத் தட்டுப்பாடு

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உரத்திற்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. உரத்தின் விலை குறைக்கப்படும் என்பதற்கு பின்னர் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது, ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திற்கு 100 அந்தர் ரி.டி.எம். உரம் வந்தபோதிலும் அதனை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதில் திணைக்களம் பல இடர்களை எதிர்நோக்கியுள்ளதாக கூறப் படுகிறது.

உரம் போடவேண்டிய காலம் தவறுகின்ற போதிலும் உரத்தினை அனுப்புவதில் கமநல சேவைத் திணைக்கள உயர் அதிகாரிகள் அக்கறை காட்டாததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். (த-6-341)

# இடமாற்றக் கோரிக்கைக்கு பதில் இல்லை; முல்லைத்தீவு அரச அலுவலர்கள் ஏமாற்றம்

புதுக்குடியிருப்பு,ஜன.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த அரச ஊழியர்களுக்கு அது தொடர்பான பதில்கள் ஏதும் அனுப்பிவைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து பல வருடங்களாக ஒரே திணைக்களத்தில் சேவை புரிந்தவர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் இடமாற்றம் வழங்கப்பட இருப்பதாக ஊடகங்கள் வாயிலாக செய்திகள் வெளியாகி இருந்தன.

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் கீழ் இயங்கும் திணைக்களங்களுக்கும் இடமாற்றம் தொடர்பாக அறிவித்தல் ஏதும் இது வரை அனுப்பிவைக்கப்படவில்லை.

இதனால் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த பல ஊழியர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஏனைய மாவட்டங்களில் இடமாற்றம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு தனித்தனிக் கடிதங்களும் பட்டியல்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-6-353)




# வாகன உரிமம் வழங்கும் பணிகள் பிரதேச செயலகங்களுக்கு மாற்றம்

## கிளிநொச்சி அரச அதிபர் தகவல்

கிளிநொச்சி, ஜன.9

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த வாகனங்களுக்கு உரிமம் வழங்கும் நடவடிக்கை பிரதேச செயலகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இது வரை காலமும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பதிவு செய்[illegible]ப்பட்ட வாகனங்களுக்கான வருடாந்த வ[illegible]ன உரிமம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்டு வந்தது.

இச்செயற்பாடு கடந்த முதலாம் திகதி முதல் பிரதேச செயலகங்களுக்கு பரவலாக்கப்பட்டுள்ளது. எனவே, வாகன உரிமையாளர்கள் தமது வாகன உரிமங்களை கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வாகனப்பதிவுப் புத்தகம் (மூலப்பிரதி), காப்புறுதிச் சான்றிதழ் (வலுவுள்ளது), இறுதியாகப் பெற்ற வருடாந்த உரிமம், தேசிய அடையாள அட்டை மற்றும் உரிய கட்டணம் என்பவற்றை குறிப்பிட்ட பிரதேச செயலகங்களில் செலுத்தி தமக்குரிய வாகன உரிமங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார் அரச அதிபர். (த-6)

# மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: கரைச்சி லக்கிஸ்ரார் அணி சம்பியன்

பரந்தன், ஜன.9

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறையினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கரைச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 18 கழகங்கள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியில் கரைச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகமும், பூநகரி ஜெகமீட்பர் அணியும் இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்றன.

இவ்விறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இறுதியில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பெற்று சமநிலையில் இருந்தன.

இதனால் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக சமனிலை உடைப்பு உதை (பனால்டி) வழங்கப்பட்டது. ஆனால், பூநகரி ஜெகமீட்பர் அணியினர் அதனை ஏற்க மறுத்து மைதானத்தைவிட்டு வெளியேறினர்.

இச்சுற்றுப் போட்டியில் கரைச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றதாக நடுவரால் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் கரைச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2005 ஆம் ஆண்டுக்கான மாவீரர் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இதே வேளை- போட்டி விதிமுறைகளுக்கு முரணாக நடந்து கொண்ட ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகத்தை தமிழீழ விளையாட்டுத்துறை இரண்டு வருடங்களில் எந்தப் போட்டியிலும் பங்குபற்றுவதற்கு தடை விதித்துள்ளது.

எதிர்காலங்களில் இடம்பெறும் போட்டிகளில் பங்குபற்றும் ஒவ்வோர் அணிகளும் விளையாட்டு விதிமுறைகளை மதித்து செயற்பட்டு, தமிழ்த் தேசியத்திற்கு பெருமை சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் சு.ரதன் கேட்டுள்ளார்.

(-6,352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன அதிபர் அப்பாஸின் கட்சிக்குள் பூசல்; மரணப் படுக்கையில் இஸ்ரேலியப் பிரதமர்

பலஸ்தீன பொதுத் தேர்தல் பிற்போடப்படக் கூடிய நிலை உருவாகியுள்ள அதே சமயம் இஸ்ரேலிய அரசியலிலும் புதிய திருப்பங்கள் ஏற்படும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

பலஸ்தீன அதிபர் கட்சிக்குள்ளேயே சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளார். இஸ்ரேலியப் பிரதமர் கடும் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் உயிருக்குப் போராடி வருகின்றார்.

பலஸ்தீனத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் கட்சிப் பிரசாரங்களும் மும்முரம் அடைந்துவரும் அதேவேளை, அதிபர் மக்மூத் அப்பாஸின் கட்சிக்குள்ளேயே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளாலும் சில பகுதிகளில் தேர்தல் நடத்தப்படுவதை இஸ்ரேல் தடுக்க முனைவதாலும் மீண்டும் தேர்தல் தாமதமடையும் நிலை ஏற்படலாம் என்று நோக்கர்கள் கருதுகிறார்கள்.

வரப்போகும் தேர்தல் அதிபர் அப்பாஸின் கடந்தகால ஆட்சி தொடர்பான ஒரு கருத்துக்கணிப்பாகவே இருக்கும் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. முன்னாள் அதிபர் அரபாத்தின் மறைவின் பின்னர் இஸ்ரேலுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் மற்றும் இஸ் ரேலியரைக் காஸாப் பகுதியிலிருந்து வெளியேறச் செய்தமை போன்ற அவரது கடந்தகால செயற்பாடுகள் இந்தத் தேர்தலில் பலஸ்தீன மக்களால் சீர்தூக்கிப் பார்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

காஸாவிலிருந்து இஸ்ரேலியர் வெளியேறியதைத் தொடர்ந்து அப்பகுதியில் அமைதி தோன்றும் என்றும் பலஸ்தீன நாடு நிறுவப்படுவதற்கான வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் காஸாவில் குழப்பகரமான நிலைமைகளும் மேற்குக் கரையில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் பகுதியில்

## இரு நாடுகளிலும் தேர்தலை ஒத்திப்போடப்படும் சூழ்நிலை

மற்றும் கிழக்கு அரபு ஜெருசலேம் தொடர்பாக அந்நாடு கடைப்பிடித்துவரும் இராஜதந்திர போக்கு களும், அப்பாஸின் அரசியல் நிலைப்பாட் டில் தளர்வினை


பலஸ்தீன 'பக்தாஹ்' அமைப்பு அதன் 41ஆவது வருடாந்த தினத்தைக் கொண்டாடியபோது...

ஏற்படுத்தியிருப்பதாகக் கருதப்படுகின்றது. ஆளும் பக்தாத் அமைப் பின் செல்வாக்கு மேற்கண்ட நிலைமைகளால் குறைந்துவருவதாகவும் பார்வை யாளர்கள் கூறுகிறார்கள்.

பலஸ்தீனர்கள் மத்தியில் செயற்படும் தீவிர போராளி அமைப்பு 'ஹமாஸ்' இஸ்ரேலுக்கு எதிராக நடத்திவரும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களினாலும் பலஸ்தீனர்கள் மத்தியில் மேற்கொண்டுவரும் கருணைச் செயற்பாடுகளினாலும் செல்வாக்குப் பெற்ற அமைப்பாக இருப்பதனால் அப்பாஸின் பத்தாஹ் அமைப்புக்குப் பலத்த எதிர்க்கட்சியாகத் தலைதூக்கியுள்ளது.

பத்தாஹ் அமைப்புக்குள்ளேயே செல்வாக்கும் அனுபவமுமிக்க உறுப்பினர்களுக்கும், கட்சியில் முக்கிய பங்களிப்பை எதிர்பார்க்கும் இளைஞர்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளினால் அப்பாஸ் தேர்தலைத் தாமதப்படுத்தக்கூடிய அளவுக்கு நெருக்குதலுக்குள்ளாகியிருப்பதாகவும் தோன்றுகின்றது. நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படாது போகுமானால் தேர்தல்கள் மீண்டும் ஒத்திப்போடவேண்டி ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஹமாஸ் அமைப்பைப் பொறுத்தவரை பலஸ்தீன தேர்தல் ஒத்திப் போடப்படுவதை அவர்கள் சற்றும் விரும்பவில்லை.

எமது மக்கள் புதிய சகாப்தம் ஒன்றின் எல்லையில் இருக்கிறார்கள். இது உண்மையான மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் கொண்டுவரக்கூடிய சகாப்தமாக இருக்கப்போகின்றது என்று ஹமாஸ் அமைப்பின் சமி அபு ஸுக்ரி என்ற பேச்சாளர் கூறியுள்ளார்.

இஸ்ரேலிய அதிகாரிகள் கிழக்கு ஜெருசலேம் பகுதியில் தேர்தல் இடம்பெறுவதைத் தடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால் தேர்தலை ஒத்திப்போடுவது பற்றி அப்பாஸ் யோசிப்பதாகத் தெரிகின்றது.

பலஸ்தீன நாடு அமைக்கப்பட்டதன் பின்னர் அதன் தலைநகராகக் கிழக்கு ஜெருசலேம் அமையவேண்டும் என்பது பலஸ்தீனர்களின் எதிர்பார்ப்பு. 1967ஆம் ஆண்டு இடம்பெற்ற போரில் இப்பகுதியை இஸ்ரேல் பிடித்துத் தன் பகுதியுடன் இணைத்துக் கொண்டது.

அண்மையில் கட்டாருக்கு விஜயம் செய்திருந்தபோது அப்பாஸ் வெளியிட்ட கருத்தில் தேர்தலில் ஜெருசலேமும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்றே நாங்கள் எல்லோரும் விரும்புகின்றோம் என்று கூறியிருந்தார்.

இஸ்ரேலியர் முழு ஜெருசலேமும் தங் கள் நாட்டின் சாசுவதமான தலைநகர் என்று கூறிவருகின்றார்கள்.

கிழக்கு இஸ்ரேலில் பலஸ்தீனர்களின் வாக்களிப்புக்கு அனுமதிக்கப்படுமா என்பது பற்றி இஸ்ரேலியர் இன்னமும் தெளிவாக ஒன்றும் அறிவிக்காமல் இருந்து வருகிறார்கள் என்று பலஸ்தீன அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

1996ஆம் ஆண்டு நடந்த பலஸ்தீனத் தேர்தலில் ஜெருசலேமில் வாக்களிப்பதற்கு இஸ்ரேலியர் அனுமதித்திருந்தார்கள். ஆனால் அப்போது ஹமாஸ் பகிஷ்கரிப்பு செய்திருந்தது.

'ஹமாஸ்' தேர்தலில் பங்கேற்பதை அப்பாஸ் வரவேற்பதாகத் தெரிகிறது.

இம்மாதிரிச் செயற்பாட்டின் மூலம் அவர்களை ஜனநாயக வழிக்குத் திரும்பச் செய்யலாம் என்பது அவர் கருத்து. அப்பாஸின் இந்த நிலைப்பாட்டை அவரது மேற்கத்திய ஆதரவாளர்களும் ஆதரிப்பதாகத் தெரிகின்றது.

### பக்தாஹ் அமைப்பு முன்னிலையில்

எதுவானாலும் மக்மூத் அப்பாஸின் ஆளும் 'பத்தாஹ்' அமைப்புக்குள்ளேயே கருத்து முரண்பாடுகள் முனைப்புப் பெற்றிருக்கும் அதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின் பிரகாரம் 'ஹமாஸ்' தீவிர போக்கு அமைப்பைவிட 'பத்தாஹ்' முன்னிலையில் இருப்பது தெரியவந்துள்ளது.

43 வீத வாக்காளர்கள் 'பத்தாஹ்' அமைப்புக்கும் [...] வீதம் 'ஹமாஸ்' அமைப்புக்கும் வாக்களிப்பார்கள் என்று கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி நடத்தப்பட்டதொரு கருத்துக்கணிப்பில் ஹ்மாஸ் முன்னிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அண்மையில் மேற்குக்கரையில் நடைபெற்ற உள்ளூர் சபைகளுக்கான தேர்தலில் 'ஹமாஸ்' பெரும் வெற்றியீட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

* * *

### இந்திய பல்கலையில் தீவிரவாதிகள் தாக்குதல்

இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத்துக்குப் பேர்போன கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூரில் அண்மையில் விஞ்ஞானிகள் மகாநாடொன்றில் தீவிரவாதிகள் நடத்தியுள்ள தாக்குதல் இந்திய ராஜதந்திர வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


ஆயிரத்து 500 தொழில் நுட்ப நிறுவனங்களின் மையமாகவிருக்கும் இந்நகரின் மீது தீவிரவாதிகள் கண்வைத்திருப்பது இந்தியாவின் அதிதீவிர வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருந்துவரும் தொழில்நுட்பத் துறையைச் சீரழிக்கும் நோக்கமாகவிருக்கும் என்று அஞ் சப்படுகின்றது.

பெங்களூரிலுள்ள விஞ்ஞான சர்வகலாசாலையில் இந்த குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. இதில் பேராசிரியர் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் நான்கு பேர் காயமுற்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இஸ்லாமியத் தீவிரவாதி ஒருவர் பக்கத்து மாநிலமான ஆந்திராப் பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பெங்களூரில் இடம்பெற்ற இச்சம்பவம் அருகிலுள்ள ஏனைய தொழில்நுட்ப நகரங்களான சென்னை, ஹைதராபாத் போன்றவற்றிலும் பாதுகாப்புச் செயற்பாடுகளைத் தீவிரமடையச் செய்துள்ளது. ஹதராபாத்தில் கடந்த திங்கட்கிழமை தீவிரவாதிகள் என்று கருதப்படும் இரண்டு நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். பொலீஸ் நிலையங்கள் மீது தொழில்நுட்ப நிறுவனங்கள் மீதும் தாக்குதல்களை நடத்துவதற்காக இவர்கள் திட்டம் தீட்டியிருந்தார்கள் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

* * *

## மெக்ஸிக்கோ போராளித் தலைவரின் மோட்டார்சைக்கிள் பவனி


மெக்ஸிக்கோ போராளிகள் இயக்கத் தலைவர் மோட்டார் சைக்கிளில் நாடு முழுவதும் பயணம் மேற்கொள்கிறார்.

### போராளித் தலைவரின் மோட்டார் சைக்கிள் பயணம்

மெக்ஸிக்கோ போராளிக் குழுவின் தலைவர் மார்கோஸ் என்பவர் தனது காட்டுப் பகுதி மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு நாடு முழுவதற்குமான மோட்டார் சைக்கிள் பயணம் ஒன்றைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்தார். மெக்ஸிக்கோவிலுள்ள இந்தியர்களுக்கும் ஏழைகளுக்கும் அதிக வசதிகள் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த இயக்கம் நடத்தப்படுகின்றது.

மெக்ஸிக்கோவில் வரும் ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலையொட்டி இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கிராமப் பகுதிகளிலிருந்து முகமூடிகள் அணிந்த தீவிரவாதப் போராளிகள் மோட்டார் சைக்கிள் பயணம் ஆரம்பமான இடத்தில் கூடியிருந்து மார்கோஸையும் அவரது சகபாடிகளையும் கையசைத்து வழியனுப்பி வைத்தார்கள்.

ஸப்பாட்டிஸ்டாஸ் என்றழைக்கப்படும் இந்தப் போராளி அமைப்பு 12 வருடங்களுக்கு முன் நடத்திய இரத்தப் புரட்சியொன்றின் மூலம் கிராமங்களைக் கைப்பற்றிய தன்பின்னர் முதற்றடவையாக இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளன.

மார்கோஸ் முகமூடியணிந்து தலைக்கவசத்துடன் ஆதரவாளர்களுக்குக் கையசைத்தபடி மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டு கிராமத்துக்குள் பிரவேசித்தார். அவருக்குப் பின்னால் நூற்றுக்கணக்கான போராளிகள் மோட்டார் சைக்கிள்களில் ஓடிச்சென்றார்கள். மெக்ஸிக்கோவில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் சென்று இடதுசாரிகள் அனைவரும் விரிவானதோர் அமைப்பாக ஒன்றுபட்டு முதலாளித்துவத்துக்கு எதிராகச் செயற்படும்படி கோருவது இதன் நோக்கம் என்று தெரிகின்றது. தேர்தலில் தனது செல்வாக்கைப் பிரயோகிக்க விரும்பும் இந்த இயக்கத்தினர் பதவி களை வகிக்கமாட்டார்கள் என்று கூறப்படுகின்றது.

இப்போராளிகள் குழுத் தலைவர் வழமையாகக் குதிரையில்தான் சவாரி செய்வது வழக்கம். ஊடகங்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு - ஆனால், மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகின்றது.

* * *

### பிரி. கொன்சர் வேட்டிவ் கொள்கை மாற்றம்?

பிரிட்டிஷ் கொன்சர்வேட்டிவ் எதிர்க்கட்சித் தலைவர் டேவிட் கொமரோன் தனது கட்சி முன்னாள் தலைமை அமைச்சர் மார்கிரட் தட்சரின் கோட்பாடுகளிலிருந்து விடுபட்டு பணக்காரர்களைவிட ஏழைகளின் நலன்களையே முன்வைத்துச் செயற்படப் போவதாக அறிவித்துள்ளார்.

முன்னைய கொன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் மைக்கன் ஸாவர்ட்டின் கொடிக்கப்பல் சுகாதாரத் திட்டதையும் கமரோன் நிராகரித்துவிட்டார். இந்தத் திட்டத்தின்கீழ் வெளியார்களிடம் சிகிச்சைக்குப் போகும் நோயாளிகளுக்கு மானியம் வழங்கப்படுவதாக இருந்தது. இந்தத்திட்டத்தை நிராகரித்துள்ள கமரோன் "டோரிகள்" எப்பொழுதுமே பெரும் தொழில்களை ஆதரிப்பவர்கள் என்ற நிலையை மாற்றுவதாகக் கூறியுள்ளார்.

* * *

### ஏரியல்ஷெரோன் உடல் நிலை

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனுக்கு உயிராபத்தான நிலை ஏற்பட்டிருப்பதனால் இஸ்ரேல் பலஸ்தீன பிணக்கில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தும் ஆபத்தும் ஏற்படும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

காஸா நிலப்பகுதியிலிருந்தும் மேற்குக் கரையிலிருந்தும் இஸ்ரேலியப் படைகளை வாபஸ் பெறுவதில் உள்நாட்டில் பெரும் எதிர்ப்பும் கட்சிக்குள் சிக்கலும் ஏற்பட்டிருந்தபோதிலும் வெற்றிகரமாக அதனைச் செயற்படுத்தியவர் என்று சர்வதேச மட்டத்தில் அவர் பாராட்டுக்குரியவராகவும் இருந்தார். அவருக்கு ஏற்பட்டுள்ள மிக அபாயகரமான நோயிலிருந்து அவர் தப்புவாரா என்பது சந்தேகமாகவிருந்தாலும் அவ்வாறு குணமானாலும்கூட மீண்டும் பிரதமர் பதவியை வகிக்கும் நிலையில் இருக்கமாட்டார் என்று கருதப்படுகின்றது.

அவர் ஆரம்பித்த 'நோட்மாப்' கட்சி இனி உருப்படுமா என்பதும் கேள்விக்குறியாகியுள்ளது. விரைவில் நடைபெறப்போகும் இஸ்ரேலியத் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றிபெறும் என்பதைவிட எவர் பிரதமராவர் என்பதே அங்கு பெரும் பிரச்சினையாக இருக்கப்போகின்றது. இதனால் இஸ்ரேல் - பலஸ்தீன பிணக்கு மீண்டும் தொடர் இழுபறி நிலைக்குள் தள்ளப்படும் அல்லது ஷெரோனின் முயற்சியால் முன்னெடுக்கப்பட்ட 'அமெரிக்க' ஆதரவிலான 'றோட் மப்' தீர்வுத் திட்டம் செயலுருப்பெறுமா என்பது விரைவில் தெரியவரும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவிலிருந்து வருகை தரும் பயணிகள் மீது குறிகாட்டுவானில் படையினர்சோதனைக் கெடுபிடி

நெடுந்தீவு,ஜன.9

நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் பயணிகள் குறிகாட்டுவான் இறங்கு துறையில் கடற்படையினரால் தீவிர சோதனைக்குட்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நெடுந்தீவுப் பகுதி மக்கள் குறிகாட்டுவான் துறைமுகத்தில் வந்து இறங்கியதும் அங்குள்ள மண்டபத்தில் வரிசைக்கிரமத்தில் நின்று தமது பெயர், அடையாள அட்டைகளைப் பதிவுசெய்து கொள்ளல்வேண்டும்.

அத்துடன், அவர்கள் தம்முடன் எடுத்துச் செல்லும் உடுபுடைவைகள் உட்பட ஏனைய பொருள்கள் அனைத்தும் துருவித்துருவி ஆராயப்படுகின்றன. அதன் பின்னரே யாழ். நகருக்கான பயணத்தைத் தொடர அவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

நெடுந்தீவுப் பயணிகள் குறிகாட்டுவானில் சுமார் ஒரு மணிநேரம் சோதனைக்கு உட்படுத்தப்படுவதால் இவர்கள் யாழ்ப்பாணம் செல்லும் பஸ்களைத் தவறவிட்டு ஏனைய வாகனங்களில் அளவுக்கு அதிகமாக முண்டியடித்துக் கொண்டு பயணிக்கவேண்டியுள்ளது.

குறிகாட்டுவான் துறைமுகத்தில் இடம்பெறும் சோதனைகளைப் போன்றே மடத்துவெளி, அல்லைப்பிட்டி, பண்ணை ஆகிய இடங்களிலும் தீவுப்பகுதிகளிலிருந்து வருகைதருவோர் பொதிகளுடன் இறங்கப்பட்டு சோதனையிடப்படுகின்றனர்.

சில நிமிட இடைவெளியில் நான்கு இடங்களில் இறங்கி ஏறவேண்டியுள்ளதால் வழமையான நேரத்திலும் பார்க்க ஒன்று முதல் ஒன்றரை மணி நேரம் வரை மக்கள் தாமதித்தே யாழ்ப்பாணம் வந்து சேரவேண்டியிருப்பதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாகத் தினமும் காலையில் வந்து மாலை வீடு திரும்பிவிடலாம் என்ற நினைவுடன் வரும்பயணிகள், யாழ். நகரில் தங்கி மறுநாளே தமது ஊருக்குத் திரும்ப வேண்டியதாக உள்ளது என்றும் கூறப்பட்டது.(எ-111)

# மருந்துக் களஞ்சியத்தில் குளிர் அறை நிர்மாணம்

குருநகர்,ஜன.9

யாழ். பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய மருந்துக் களஞ்சிய வளவில் யுனிசெவ் உதவியுடன் குளிர் அறை (Cool Room) ஒன்று அமைக்கப்படவுள்ளது.

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான முழுத்தடுப்பு மருந்துகளும் இங்கு களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் எனவும் - அவர் மேலும் கூறினார். (எ-51)

# திருவிழாவில் விற்பனையான தேன் முறுக்கில் தடைசெய்யப்பட்ட நிறமூட்டி கலப்பு

## நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

வலி.தென்மேற்கு,ஜன.9

ஆலய உற்சவத்தின்போது விற்பனை செய்யப்பட்ட தேன் முறுக்கில் 'றொடமின்' என்றழைக்கப்படும் தடைசெய்யப்பட்ட நிறமூட்டியைப் பயன்படுத்தியதைப் பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அதனை விற்பனை செய்தவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நடைபெற்ற மஹோற்சவ காலத்தில் அங்கு வைத்து தேன் முறுக்கு விற்பனை செய்தவர்மீது குற்றம் சுமத்தி உணவு மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவன் இந்த வழக்கை கடந்த வாரம் தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி நபர் விற்ற தேன் முறுக்கின் ஒரு பகுதி எடுக்கப்பட்டு அது கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் மேலதிக அரச பகுப்பாய்வாளருக்குப் பரிசோதனைக்காக முன்னர் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இந்தத் தேன் முறுக்கில் தடைசெய்யப்பட்ட - தீங்கு விளைவிக்கக் கூடிய 'றொடமின்' எனப்படும் சாயநிறமூட்டிப் பவுடர் சேர்க்கப்பட்டுள்ளதாக மேலதிக அரச பகுப்பாய்வாளர் கடந்த வாரம் யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு அறிவித்திருந்தார்.

இதனை அடுத்து மேற்படி முறுக்கை விற்பனை செய்தநபர் மீது இவ்வாரம் யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோதகரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(எ-135)




# சில்லாலை சாந்தைப் பகுதி மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் சிரமம்

வலி.தென்மேற்கு, ஜன.9

சில்லாலை சாந்தைப் பகுதியிலுள்ள மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெருஞ்சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

நல்ல குடிதண்ணீரைப் பெறுவதற்காக இவர்கள் தினமும் 2 கிலோமீற்றர் தூரத்திலுள்ள பண்டத்தரிப்பு பொதுக் கிணற்றுக்குச் சென்று பிளாஸ்ரிக் கலன்களில் தண்ணீரை எடுத்துச் சென்று பயன்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது.


நான்கு மாத காலத்துக்கு முன்பு சுமார் ஏழு லட்சம் ரூபா செலவில் வலி.தென்மேற்கு பிரதேச சபையினால் சாந்தை கிராமத்துக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் பொருத்தப்பட்ட குழாய் ஒன்று பலத்த சேதமடைந்ததையடுத்து தண்ணீர் விநியோகம் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது.

இதேசமயம் - அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின் போது மேற்படி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட நல்ல தண்ணீர் கிணற்றினுள்ளே வெள்ளம் புகுந்துள்ளது. இதனால், இப்பகுதி மக்கள் குடி தண்ணீரைப் பெறுவதற்கு நீண்ட தூரம் செல்லவேண்டி ஏற்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றிலிலுள்ள பொதுக் கிணறு ஒன்றிலிருந்து இவர்கள் தமக்காகக் குடிதண்ணீரைப் பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-135)



அனலைதீவில் பெரும்போகச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை அண்மையில் விவசாயக் கடன் வழங்கியது. கடன் வழங்கும் நிகழ்வில் விவசாயி ஒருவருக்கு கிராம அலுவலர் வ.வடிவழகையன் காசோலையைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையின் உத்தியோகத்தர் மு.தவபாலனும் படத்தில் உள்ளார்.

### வடக்கு - கிழக்கு கிராம அபிவிருத்தித் திணைக்கள ஏற்பாட்டில்

# ஊர்காவற்றுறையில் இரு தினங்கள் தையல், மனையியல் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜன.9

வடக்கு- கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையினரால் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த தையல், மனையியல் கைப்பணிக் கண்காட்சி எதிர்வரும் 11ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் உதவி அரச அதிபர் பணிமனையில் மாநாட்டு மண்டபதில் இந்தக் கண்காட்சி நடைபெறும்.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 9ணிக்கு நடைபெறும். யாழ். மாவட்டச் செயலக மேலதிக மாவட்ட செயலாளர் (நிதி) எஸ்.சண்முகரட்ணம் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியைத் திறந்துவைப்பார்.

யாழ். மாவட்ட செயலகத் தலைமைப்பீட உதவி அரச அதிபர் வி.வீரபத்திரப்பிள்ளை, யாழ். மாவட்டக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.தியாகமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் தெல்லிப்பழை பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர் க.ஸ்ரீபதி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (எ)

# கட்டாக்காலி நாய்களால் தொல்லை


யாழ்ப்பாணம்,ஜன.9

அரியாலை பிரதேசத்தில் பரவலாகக் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதாகப் பயணிகள் பலரும் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, யாழ். ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்பாக - கண்டி வீதியைச் சென்றடையும் வீதி, பாரதி வீதி, புறூடி வீதி, புறூடி முன் வீதி மற்றும் கண்டி வீதியிலிருந்து குடிமனைகளைச் சென்றடையும் வீதி என்பனவற்றில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

மேற்படி வீதிகளில் வசிக்கும் பெரும்பாலானோர் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்காது அவிழ்த்துவிடுகின்றனர். இதனால் இந்த வளர்ப்பு நாய்கள் வீதிகளூடாக நடந்துசெல்வோரையும் மோட்டார்சைக்கிளில் பயணிப்பவர்களையும் துரத்திச் செல்கின்றன. இத்தகைய நடவடிக்கைகளால் வீதி விபத்துகளும் ஏற்பட்டுள்ளன - என்று பயணிகள் தெரிவித்தனர். (எ)

# பொங்கலன்று தொடங்கும் மகர சங்கிராந்தி மக்களுக்கு நன்மை தருமா? அமைதி வேண்டிப் பிரார்த்திப்பது அனைவரதும் கடமை




எதிர்வரும் 14.01.2006 தொடக்கம் 12.02.2006 வரை மகர ராசியில் சூரிய பகவான் பகை பெற்றிருக்கும் காலம் மகர சங்கிராந்தி எனப்படும். இந்த நிகழ்வை வட இந்தியர்கள் ஒரு கொண்டாட்டமாகக் கொண்டாடி புனித ஸ்தலங்களில் நீராடி இறைவழிபாடு செய்வார்கள். இந்தக் குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு சோதிட ரீதியாக நன்மைகள் தரக்கூடிய காலமா? என ஆராய்ந்து பார்த்தால் பி[illegible]வரும் பலன்களைக் கூறவேண்டியது [illegible]முக்கியமான விடயமாகும்.

1. மூன்று யுத்த கிரகங்கள் அல்லது அழிவைத் தரக்கூடியதென சொல்லப்படும் சூரியன், செவ்வாய், சனி ஆகிய கிரகங்கள் முறையே மகரம், மேடம், கடகம் ஆகிய சல ராசிகளில் இருந்து ஒன்றையொன்று நோக்குவதால் கும்பலக்கினமான இலங்கைக்குப் பேரழிவைத் தரக்கூடிய காலமாகச் சொல்ல வேண்டும்.

கும்ப லக்கினத்துக்கு 6ஆம் வீட்டில் (சத்துருஸ்தானத்தில்) சனியிருக்க அதை சூரியன், செவ்வாய் நோக்குவது சத்துருக்களால். ஏற்படும் துன்பம் அல்லது கடற்பகுதிகளில் ஏற்படுகின்ற இயற்கை அழிவு அல்லது யுத்தம் என்பவற்றில் ஏதாவது ஒன்றை எதிர்பார்க்கவேண்டும்.

சலராசிகளில் நிற்கும் சூரியன் செவ்வாயைச் சனி பார்ப்பதாலும் செவ்வாய் மேட ராசியில் இருந்து இடபராசிக்குச் செல்லும் காலமான 31.01.2006 வரை கூடிய தாக்கத்தை மேற்கூறிய விடயமாகத் தரக்கூடியதாகவே சொல்லவேண்டும்.

31.01.2006இல் செவ்வாய் இடபராசிக்குச் செல்வதால் குறித்த நிலைப்பாடு தணியக்கூடியநிலை ஏற்படும். ஆனாலும், 12.02.2006வரை நிலைமையில் மாற்றம் இருக்காது.

2. நாட்டில் சமாதானம் போன்ற நிலைமைகளைக் கிரக நிலைப்படி நோக்கில் 12.02.2006இன் மேல்தான் சொல்லவேண்டும். இக்காலப்பகுதியில் [illegible]களில் சனி, செவ்வாய், சூரியனுக்குப் பிரீதி செய்து நாட்டில் சாந்தி, சமாதானம் வேண்டி பிரார்த்திக்க வேண்டியது இலங்கை வாழ் அனைத்து மக்களதும் கடமையாக இருக்க வேண்டும்.

3. குறித்த யுத்தக்கிரகங்கள் ஒன்றையொன்று நோக்கும் காலமான 2006 ஆம் ஆண்டு தமிழ் தை மாதம் முடியும்வரை தனு ராசியில் பிறந்தவர்களுக்கு அட்டமத்துச் சனியாக இருப்பதால் மிக முக்கியமாக அவதானம் பேணவேண்டிய காலமாகும். மற்றும் மகர ராசிக்காரருக்கு 7இல் சனியிருப்பதால் 71/2 மாதிரிப் பலனும் மிதுன ராசிக் காரருக்கு 71/2 கடக்கூறாகவும், கடக ராசிக்காருக்கு 71/2 நடுக்கூறாகவும், சிங்க ராசிக்காரருக்கு 71/2 முக்கூறாகவும் இருப்பதால் சனி பகவானுடைய தாக்கம் வியாழசுகம் இருந்தாலும் கூட ஏற்படாது என்று கூறிவிடமுடியாது.

4. சலராசியில் யுத்தக் கிரகங்கள் ஒன்றை ஒன்று நோக்குவதும் கடந்த 26.12.2005இல் சூரியனும், சனியும் மிதுனம், தனு ராசிகளில் நின்றபோது ஒன்றையொன்று பார்த்ததினால் 'சுனாமி' போன்ற இயற்கை அழிவு ஏற்பட்டது. இதேபோன்று குறித்த மகரசங்கிராந்தி காலமான 14.01.2006 தொடக்கம் 12.02.2006 வரை சூரியனும் சனியும் ஒரு நேர்கோட்டில் வருவதால் 'சுனாமி' போன்ற இயற்கை அழிவுகள் ஏற்படாது என்றும் கூறிவிடமுடியாது.

- சோதிடர் கு.சண்முகரட்ணம்.

# புன்னாலைக்கட்டுவன் வடக்கில் அ.அட்டை விண்ணப்பம் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.9

புன்னாலைக்கட்டுவன் வடக்குக் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதுவரை தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காத - புன்னாலைக்கட்டுவன் வடக்குக் கிராம அலுவலர் பிரிவு ஊடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடைய அனைவரையும் குறிப்பிட்ட தினங்களில் பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி, அதன் புகைப்படப் பிரதி மற்றும் உரிய ஆவணங்களுடன் தொடர்புகொள்ளுமாறு புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராம சேவகர் அறிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2006இல் உங்கள் இராசி எப்படி?

## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1

தானும் நன்மை செய்து மற்றவர்களையும் நன்மை செய்ய வைக்கும் நற்குணம் படைத்ததனுசு ராசி அன்பர்களே!

புத்தாண்டில் அட்டமத்துச்சனியின் தாக் கம் ஒருபுறம் இருந்தாலும், ஆதாயஸ் தானத்தில் உள்ள குருவின் அனுகூலம் பலமாகவுள்ளது. வாழ்வில் உயர்வான நிலையைப் பெறுவதற்காக புதிய முயற் சிகளில் ஈடுபடுவீர்கள். உடல்நலத்தில் சிரமங்கள்வராமல் தவிர்க்க நல்லபழக்க வழக்கங்களைப் பின்பற்றுவது நற்பலனைத் தரும். கணவன், மனைவி ஒற்றுமை ஒருவருக்கொருவர் ஆதரவான நிலையில் இருந்து மன அமைதியான வாழ்வைத் தரும். தந்தை வழி உறவினர்கள் உங்களின் அணுகுமுறைக்கு தகுந்தாற் போல நடந்து கொள்வார்கள். சுகவாழ்க்கை முறையில் உங்களுக்கு கடந்த காலங்களில் இருந்த ஆர்வம் குறைந்துவிடும். தந்தையின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வதில் சிரமமான சூழ்நிலை வந்துவிலகும். கஷ்டம் ஒருபுறம்இருந்தாலும் தன்னால் இயன்ற தர்மகாரியங்களைச் செய்ய முயற்சி செய்வீர்கள். தந்தை வழிமுன்னோர்களுக்கு செய்ய வேண்டிய பிதுர்கர் மங்களை நதி, கடல் ஆகிய இடங்களில் நிறைவேற்றுவதால் வாழ்வின் முன்னேற்றத்திற்கு புதிய நல்வழிபிறக்கும். மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியவர்களிடம் அன்பையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்துவீர்கள்.

தொழில், வியாபாரம் சார்ந்தவற்றில் நியாயமான நிலைகளைக் கடைபிடிப்பதால் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் பிறவிடயங்கள் விலகிப்போய் விடும். ஆதாய வரவினங்களைத் தகுந்த சமயத்தில் கவனத்துடன் செயற்பட்டு பெற்றுவிடுவீர்கள். மூத்த சகோதரர்கள் உங்களுக்கு சமயத்தில் ஏற்படும் திடீர் செலவினங்களைத் தங்களால் இயன்ற அளவு பணஉதவி செய்து குறைத்து விடுவார்கள்

வெளியூர்ப் பயணங்கள் மேற்கொள்பவர்கள் முன்யோசனைத் திட்டத்துடன் செயற்படுவதால் கூடுதல் செலவினங்களைத் தவிர்க்கலாம். வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு முயற்சி செய்பவர்களுக்கு அனுகூல நற்பலன் உண்டாகும். திருமண முயற்சி செய்பவர்களுக்கு வாய்ப்புகள் கைகூடும்.

**தொழில்அதிபர்கள்:** கல்வி நிறுவனம் நடத்துபவர்கள், கணனிசாதனங்கள், அச்சகம், மருத்துவமனைகளை நடத்துபவர்கள் பெயரும், வருமானமும் பெறுவார்கள். குடியிருப்புகள் கட்டிவிற் பனை செய்பவர்கள், பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்துள்ளவர்கள், விடுதிகள், பஸ் நிறுவன அதிபர்கள், குளிர்பானம், இனிப்புகள், ஐஸ் கிறீம் மற்றும் நவீன மின்னியல், இலத்திரனியல் சாதனங்களை உற்பத்தி செய்பவர்கள் தங்களின் தொழில் நடைமுறைகளை நன்கு அறிந்து செயற்படுவதால் பொருளாதார இழப்புகளைத் தவிர்த்து நிதானத்துடன் கூடியமுன் னேற்றம் காணலாம்.

**வியாபாரிகள்:** புத்தகம், நவீன விளையாட்டுப் பொருள்கள், இலத் திரனியல் பொருள்கள், கடிகாரவிற் பனையாளர்கள் விற்பனைக்கு தகுந்த வாறு மூலதனத்தைப் பயன்படுத்துவதால் சரியானலாபம் பெற்று நிம்மதிகாண்பார்கள். அழகு சாதனப் பொருள்கள், துணி, பாத்திரம், தளபாடங்கள், காலணி, சாயப் பொருள்கள், கைவினைப் பொருள்கள், கண்ணாடி, பீங்கான் பொருள்கள், காய்கறி, தானியம், பூ வியாபாரம் செய்பவர்கள் தேவைக்கு தகுந்தவாறு கொள்முதல் செய்து உடனுக்குடன் விற்பனை செய்து தகுந்த பணவரவு பெறுவார்கள்.

**பணியாளர்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணியின் இலக்கை பூர்த்தி செய்ய சிரமப்படுவார்கள். சக ஊழியர்கள் உங்களின் பேச்சால் தங்களின் நட்பைத்தொடர மறுபரிசீலனை செய்வார்கள். பணி தொடர்பான இடமாறுதல் மற்றும் பணி உயர்வு போன்ற விடயங்களில் தாமதமான நிலை கண்டு கவலை வேண்டாம். அதிர்ஷ்டகரமான முன்னேற்றம்தரும் மாறுதல் உருவாகலாம். கூட்டுத் தொழில் செய்பவர்கள் சகபங்குதாரர்களிடம் உருவாகும் சிறு பிரச் சினைகளைப் பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுப்பதால் வியாபார அபிவிருத்தி ஏற்படும். சுயதொழில் புரிபவர்கள் சந்தை வாய்ப்புகளை பலப்படுத்த கூடுதல் முயற்சியுடன் செயற்பட்டு தெய்வ அருளால் நன்மை பெறுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் நிறைந்திருக்கும். ஒவ்வொரு செயலின் பின் விளைவை அறிந்து செயல்படுவதால் நிம்மதி நிறைந்த வாழ்வைப் பெறுவீர்கள்.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி இலக்கை உத்வேக மனநிலையுடன் செயற்பட்டு நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவார்கள். சக ஊழியர்கள் அனுகூலம் செய்யும் மனோபாவத்துடன் செயற்படுவார்கள். சுயதொழில் புரியும் பெண்கள், தங்கள் தொழில் வளர்ச்சி பெறுவதற்கான அனைத்து வசதிகளையும் தடையின்றி பெறுவார்கள். தொழில் சார்ந்த வகையிலுள்ள தடைகள்தாமாக விலகும். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண் கள், கணவரின் நல்அன்பை பெற்று நிறைவான பண வசதியுடன் மன மகிழ்வு பெறுவர்.

புத்திரர்களின் ஒவ்வொரு செயலையும் கூடுதல் பயன்தரும் நிலைக்கு உயர்த்துவீர்கள். உடல் நலத்தில் கவனம் வேண்டும். மாங்கல்ய பலம் அதிகரிக்க தகுந்த பூஜை முறைகளைப் பின்பற்றுதல் நலமாகும். அணி கலன்களை பாதுகாக்கும் விடயத்தில் கூடுதல் கவனம்வேண்டும்.

**மாணவர்கள்:** தொழில்நுட்ப பயிற்சி, நிதி,நிர்வாகம் உள் அரங்க வடிவமைப்பு, ஆசிரியர் பயிற்சி, மருத்துவம், விஞ்ஞானம், விவசாயப் பயிற்சி மாணவர்கள், படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவதால் மட்டுமே இருக்கும் நற்பெயரைக் காப்பாற்றவும் சரியான தரதேர்ச் சியும் பெற முடியும். விளையாட்டில் ஆர்வ முள்ள மாணவர்கள் போட்டிகளில் பங்கு பெறும் பொழுது பாது காப்பு கடைப் பிடிப்பதால் மட்டுமே அசம்பாவிதம் இல்லாதபடி வெற்றியைப் பெற முடியும்.பத்தி ரிகை சார்ந்த கல்வி பயிலும் மாணவர்கள் பயிற்சிக்காகவெளியில் செல்லும் போது மக்களிடம் கவனமாகப் பழகவேண்டும். தந்தை மகன் உறவு நிலை தாமரை இலை தண்ணீர்போல பட்டும் படாமலும் இருக்கும். படிப்புக்கு தேவைப்படும் பணவசதிகள் தாமதமாகக் கிடைக்கும்.

(ஏனைய இராசிகளுக்கான பலன்கள் தொடர்ந்து வெளிவரும்)


### கணித, ஆங்கில வகுப்புக்கள்

தரம் 6 முதல் 11வரை, (O/L) REPEAT மாணவர்களிற்கு கணித பாடமும் தரம் 3 முதல் 6 வரை ஆங்கில பாடமும் மேலதிக பயிற்சிகளுடன் சிறந்த பெறுபேறு பெறும் வகையில் தனியாகவும் குழுக்களாகவும் இருப்பிடம் வந்து கற்பிக்கப்படும்.

**தொடர்பு: 0779599365** (45138)

### வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் ஒருவர் தேவை

**தொடர்பு:- 25/6, அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு.**

T.P:021 222 6678, 0777 550886 (45139)

COMTEC

*சமூக தொழில்நுட்பக் கல்வி நிலையம்*

*கொமரெக் சுழிபுரம்*

*இருபாலாருக்குமான*

**தொழிற்பயிற்சி நெறிக்கான விண்ணப்பம்கோரல்**

வானொலி, தொலைக்காட்சி சீர்செய்தல் (10 மாதம்,முழுநேரம்)

மோட்டார் வாகனப் பொறியியல் (பெற்றோல், டீசல்)

(10 மாதம், முழு நேரம்)

வீட்டு மின்சுற்று இணைப்பும் மின்னியந்திரங்கள்

மீள முறுக்குதலும் (10 மாதம், முழுநேரம்)

மரவேலை தொழில்நுட்பம் (06 மாதம், முழு நேரம்)

வயதெல்லை: 16 - 25 வரை

போரூட் நிதியுதவியுடன் அதி நவீன பயிற்சி உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு பயிற்சி வழங்கப்படுகின்றது. பயிற்சிநெறிகளுக்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களில் பெயர், முகவரி, கல்வித்தகமை, தெரிவுசெய்யும் பயிற்சிநெறி போன்ற விவரங்களைக் குறிப்பிட்டு, இயக்குநர், கொம்ரெக், சுழிபுரம். எனும் முகவரிக்கு 19 ஜனவரி 2006 இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

(45058)(51-16) **இயக்குநர்.**


## கேள்வி அறிவித்தல்

*பிரதம பொறியியலாளர் அலுவலகம்.*
*கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்.*

1. கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), பிரதம பொறியியலாளரினால் 30.01.2006 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு அல்லது அதற்கு மேல்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
3. ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட, செயற்படுகின்ற வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), பிரதம பொறியியலாளரிடம் சமர்ப்பித்து, தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப்பணத்தை செலுத்த அனுமதிக்கப்படுவர். கேள்வி வைப்புப்பணத்தை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரங்களை 09.01.2006 முதல் 27.01.2006 பிற்பகல் 3 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புப் பணம் ரூபா | ICTAD பதிவுத் தரம் |
|---|---|---|---|---|
| 01 | மகப்பேற்று விடுதி சீர் திருத்த வேலை பருத்தித் துறை ஆதார வைத்திய சாலை (UNICEF WORKS) | 17,000.00 | 500.00 | M-8 அதற்கு மேலும். |

4. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிட மிருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கௌ்ளலாம்.

*முக்கிய குறிப்பு: கேள்விதாரருக்கு VAT சம்பந்தமாக எதுவித கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதைக் கருத்தில் கொள்ளவும்.*

*பிரதம பொறியியலாளர் அலுவலகம்,*
*கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),*
*கடற்கரை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/47233)(51-16)

*எந்திரி. க. குகநேசன்,*
*பிரதம பொறியியலாளர்,*
*கட்டடங்கள் திணைக்களம் (மா.),*
*யாழ்ப்பாணம்.*


### இன்னும் நீங்கள் தாமதிக்கிறீர்களா ???



A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர் கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான வாய்ப்புக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான வாய்ப்புக்களையும் உறுதிசெய்கின்றது. அதுமட்டுமல்லாது HND தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள் போட்டி மிகுந்த வேலைவாய்ப்புச் சந்தையில் இலகுவில் தகுதியான வேலைகளைத் தட்டிச் செல்கின்றனர்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம் : 25.01.2006**



இ. பிரதீபன்
மானிப்பாய்.

2003ஆம ஆண்டு கணிதப்பிரிவில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய நான் கொழும்பு இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் ஆவேன். பல்கலைக்கழக அனுமதிக்கு எனது A/L பெறுபேறுகள் சற்றுப்போதாமல் இருந்தது. இந்நிலையில் கணனித்துறையில் எனக்கிருந்த ஆர்வம் கணனித்துறையில் ஓர் பட்டப்படிப்பினை மேற்கொள்ளவேண்டும் என்ற பேரவாவாக மாறியது. எனது ஆர்வத்திற்கு பெற்றோரும் பக்கபலமாக இருந்தனர். கொழும்பில் வசித்துவந்த நான் யாழ்ப்பாணத்தில் IIS நிறுவனம் சர்வதேச ரீதியில் பிரபல்யமான BTEC HND கற்கைநெறியினை நடாத்திவருவதாகக் கேள்வியுற்றேன். கொழும்புடன் ஒப்பிடும்பொழுது குறைந்த செலவில் இக்கற்கை நெறியை யாழ்ப்பாணத்தில் கற்கக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதை அறிந்த எனது பெற்றோர் HND ஐத் தொடர அனுமதியளித்தனர். HND 4வது பிரிவில் பயின்றுவரும் நான் இறுதியாண்டுப் பட்டப் படிப்பினை சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்வதற்குரிய ஏற்பாட்டினையும் IIS நிறுவனமே எனக்கு செய்துதரவுள்ளது. என்போன்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்கத்தவறிய மாணவர்களுக்கு HND மிகச்சிறந்த ஒன்றாகும்.

**BTEC HND**

World Class Qualifications

Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL

Approved Training Centre

**IIS CITY CAMPUS**

# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மீண்டும் போர் அபாயம் அதனை வைத்து ஜெயலலிதா உபாயம்

"ஓங்க வேணும்னா இருந்து பாருங்க, இந்த மாநாட்டை நடத்த முதலமைச்சர் அனுமதிக்கவே மாட்டாங்க எப்படியும் தடுத்து நிறுத்திடுவாங்க'

இப்படி நண்பரிடம் பந்தயம் கட்டினார் தமிழகப் பத்திரிகையின் மூத்த செய்தியாளர் ஒருவர்.

அவர் மாநாடு என்று குறிப்பிட்டது கடந்த டிசெம்பர் 29ஆம் திகதி திராவிடர் கழகத் தலை வர் கி.வீரமணி தலைமையில் நடைபெறவிருந்த ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டை மூத்த பத்திரிகையாளரான அவர் மட்டு மல்ல, பலரும் இப்படித்தான் நினைத்திருந்தார்கள்.

ஆனால், அன்றைய தினம் ஈழத்தமிழர் தரப்பை ஆதரித்து ஒன்றல்ல, இரண்டு நிகழ்வுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்துள்ள இந்தியாவில் - புலிகளை கடுமையாக எதிர்ப்பவர் என்று கூறப்படும் ஜெயலலிதா முதலமைச்சராக உள்ள தமிழகத்தின் தலைநகர் சென்னையில் நடந்தேறின.



தடையின் மத்தியில் புலிகளின் வெளியீடுகள்...

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் இடம்பெற்ற ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஆகியோர் உட்படப் பலரும் கலந்துகொண்ட ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு. அந்த நிகழ்வுகளில் ஒன்று மற்றையது தமிழக அன்னையர் முன்னணித் தலைவர் பேராசியர் சரஸ்வதி தலைமையில் நடைபெற்ற 'ஈழத்தமிழர் உரிமை - சமாதான வழி' என்ற கருத்தரங்கு இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகச் செயலாளர் சி.மகேந்திரன், மனித உரிமைச் செயற்பாட்டாளர் ரி.எஸ்.எஸ்.மணி, பத்திரிகை யாளர் கே.வி.ரமணி, கவிஞர் இன்குலாப் போன்றவர்கள் பங்கேற்றனர்.

இந்தக் கருத்தரங்கின் நிலைப்பாட்டைப் புரிந்துகொள்ள தலைமைவகித்துப் பேசிய பேராசிரியர் சரஸ்வதியின் 'ஆனையிறவையும், கட்டுநாயக்கவிமான நிலையத்தையும் தகர்த்த கையோடு இராணுவச் சமநிலையில் நின்று போர் நிறுத்தத்தை அறிவித்தார் தம்பி பிரபா கரன் என்ற வார்த்தைகளே போதும்.

இந்தக் கருத்தரங்கு மனித உரிமை செயற்பாட்டாளர்களால் நடத்தப்பட்டது. இதில் பங்கேற்றவர்கள் அரசியல்வாதிகள் இல்லை. ஆகவே, ஜெயலலிதா இக் கருத்தரங்கைக் கண் டும் காணாமலும் விட்டிருப்பார் என்று வைத்துக்கொண்டாலும் கூட வைகோ, ராமதாஸ் என்ற ஜெயலலிதாவின் அரசியல் எதிரிகள் பங்கேற்ற மாநாடு தடைசெய்யப்படும் என்றே நம்பப்பட்டது.

என்றோ ஒருநாள் அரசியல் கூட்டங்களில் விடுதலைப் புலிகளை நேரடியாக ஆதரித்துக் கூட இன்றி ஈழத்தமிழரின் பரிதாப நிலையை எடுத்துக்கூறியதை கைத்துக் கொண்டு பல மாதங்கள் கழித்து வை.கோ, பழ. நெடுமாறன் ஆகியோரை 'பொடா' சட்டத்தில் கைது செய்தது தமிழக அரசு.

ஆனால், இப்போது மாநாடு நடந்த அரங்கில் விடுதலைப் புலிகளின் கொள்கையை விளக்கும், தலைவர் பிரபாகரனின் புகழ்பாடும் ஒலி, ஒளி நாடாக்கள், இறுவட்டுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்க, உள்ளே, தமிழீழக் கொடி விரைவில் ஐ.நா. சபையில் பறக்கும் என்று வைகோ முழங்க, எழுச்சியுடன் நடந்த ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. தமிழக அரசு.

ஜெயலலிதாவுக்கு ஈழத்தமிழர்கள் மீது பாசம், பரிவு, பீறிட்டுக் கொண்டு வந்துவிட்டதா? புலிகளின் பாதையை ஏற்றுக்கொண்டு விட்டாரா? இதெல்லாம் கொள்கை என்று ஒன்று இருப்பவர்களுக்கு ஜெயலலிதாவைப்பொறுத்தவரை அப்படியெதுவும் கிடையாது. தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகளை உடைப்பதற்கு ஜெய லலிதா செய்த தந்திரங்கள் எதுவும் பலிக்கவில்லை. இப்போது இலங்கையில் போர்வெடிக்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதைப் பயன்படுத்தி மீண்டும் உடைப்பு வேலையை ஆரம்பித்திருக்கிறார் அவர். அவ்

## தமிழகத்தில் ஈழத்தமிழர்களுக்கு அரசியல், சமூக முக்கியத்துவம்

வளவுதான்! என்று கூறுகிறார் ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுத்துவரும் தமிழகப் பேராசிரியர் ஒருவர்.

இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தமிழகச் சட்ட சபைக்கு எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மே மாதத் தொடக்கத்தில் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதில் வென்று எப்படியாவது ஆட்சியைத் தக்க வைத்துவிடவேண்டும் என்பதே ஜெயலலிதாவின் இன்றைய சிந்தனை.

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கருணாநிதி, வைகோ, ராமதாஸ் ஆகியோர் கூட்டணி அமைத்து காங்கிரஸாருடன் இணைந்து போட்டியிட்டனர். அதில் தமிழகத்தின் 39 தொகுதிகளிலும் அந்தக் கூட்டணி வெற்றிபெற்றது. போதாக்குறைக்கு மத்திய அரசில் காங்கிரஸின் ப.சிதம்பரம், தி.மு.கவின் டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன், பா.ம.க.க. தலைவர் டாக்டர் ராமதாஸின் மகன் அன்புமணி என்று ஜெயலலிதாவின் வைரிகள் அமைச்சர்களாக இருந்து கொண்டு அவரைப் படாதபாடுபடுத்துகின்றனர்.

இதனால், எப்படியாவது வைகோ, ராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல். திருமாவளவன் ஆகியோரை அ.தி.மு.க. கூட்டணிக்கு இழுத்துவிடத் துடிக்கிறார் ஜெயலலிதா. இதற்காக ஈழத்தமிழர்களுக்கு தானும் ஆதரவு என்பதுபோல் காட்டிக் கொள்கின்றார். அத்துடன், ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டுக்கு குந்தகம் விளைவித்து வைகோ, ராமதாஸ் ஆகியோருடன் முரண்பட ஜெயலலிதா விரும்பவில்லை. இவ்வாறு வாதிடுகிறார் தமிழகப் பேராசிரியர். இலங்கை ஜனாதிபதியின் சந்திப்பை ஜெயலலிதா தவிர்த்ததும் அதனால்தான் என்கிறார் அவர்.

இதெல்லாம் கருணாநிதிக்குத் தெரியாதா? என்று கேள்வி எழுகின்றது. அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட அவருக்கு இது புரியாமலிருக்குமா? என்று கேட்கிறார் தி.மு.க. தலைமைக்கு நெருக்கமான மாவட்டச் செயலாளர் ஒருவர். கருணாநிதியை பொறுத்தவரையில் எதிரிக்கட்சிகள் கழன்றாலும் காங்கிரஸை உடும்புப் பிடியாக பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதே அவரது வியூகம் என்று கூறப்படுகின்றது.



வலுக்கிறது புலிகளுக்கு ஆதரவு

தேசிய அளவில் காங்கிரஸ் மற்றும் பாரதீய ஜனதா ஆகியவையே பிரதான கட்சிகள். ஒப்பீட்டளவில் பாரதீய ஜனதாவின் நிலை பரிதாபத்துக்குரியதாகிவிட்டது. அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் லஞ்சக் குற்றச்சாட்டில் சிக்கியமை, வாஜ்பாய் அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்தமை, உமாபாரதியின் தன்கட்சி அறிவிப்பு, அத்வானியின் தலைவர் பதவி விலகல் என உட்கட்சிப் பூசல் என பாரதீய ஜனதாக்கட்சி பின்னடைவைச் சந்தித்துள்ளது. தேசியளவில் இப்படி இருக்கும் பாரதீய ஜனதா தமிழகத்தில் செல்லாக் காசாகிவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் மூப்பனாரின் தமிழ், மாநில காங்கிரஸ் சிதம்பரத்தின் தனிக்கட்சி என்று பிரிந்தவர்கள் எல்லோரும் மீண்டும் ஒன்றிணைந்து தமிழகத்தில் பலம்பெற்ற கட்சியாக காங்கிரஸ் உள்ளது. அதனால் வைகோ, ராமதாஸ் போன்றவர்கள் பிரிந்து சென்று அ.தி. மு.கவுடன் கூட்டணி அமைத்தாலும் காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று கணக்குப் போடுகிறார் கருணாநிதி. ஆளும் கட்சி மீது இயல்பாக வரகக்கூடிய அதிருப்தியையும் தமக்கு சாதகமாக அமையும் என நம்புகின்றார் அவர்.

இதையெல்லாம் கூட்டிக்கழித்தே ஈழதமிழர் பிரச்சனை குறித்து பட்டும்படாமலும் பேசி வருகிறார் கருணாநிதி.

ஈழத்தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படக் கூடாது என்ற தி.மு.கவின் பழைய நிலைப்பாட்டில் மாற்றமில்லை. அதேசமயம், மத்திய அரசு எடுக்கும் முடிவை தி.மு.க. ஆதரிக்கும் என்று செய்தியாளர்களிடம் கூறயிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி. இதனைச் சுட்டிக் காட் டிய மாவட்டச் செயலாளர், 1991 ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட பின்னர் நடந்த தேர்தலில் விடுதலைப் புலிகள் குறித்த விடயம் முக்கியமாகப் பேசப்பட்டது. அதன் பின்னர்கைவிடப்பட்டிருந்த ஈழத்தமிழர் பிரச்சினை எதிர்வரும் சட்ட சபைத் தேர்தலில் மீண்டும் முக்கிய இடத்தைப் பிடிக்கப் போகிறது என்கிறார்.

அரசியல் காரணங்களைவிட ஈழத்தமிழர் பிரச்சினை தமிழகத்தில் முக்கியத்துவம் பெற சமூகக் காரணம் ஒன்றும் உள்ளதாக கூறுகின்றார் தென் மாவட்டங்களில் நீண்ட காலம் பணி யாற்றும் பொலீஸ் உயரதிகாரி ஒருவர்.

1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழகத்தில் தஞ்சமடைந்த ஈழ அகதிகளின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் உள்ளது. இவர்களைவிட சட்ட பூர்வமாக உள்ளே வந்து தங்கிவிட்டவர்களின் எண்ணிக்கையும் இதே அளவில் உண்டு. இவர்களின் குடும்பங்கள் கடந்த இருபது ஆண்டுகளில் பெருகிவிட்டன. இந்தியாவில் நீண்ட காலமாக இருந்தாலும் தாங்கள் ஈழத்தமிழர்கள் என்பதை பெருமிதமாகவே அவர்கள் கருதுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாக பொலீஸ் அதிகாரி கூறுகிறார்.

இதிலெல்லாம் சிக்கலில்லை என்ற பொலீஸ் அதிகாரி தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழர்களில் பெரும்பாலானவர்கள் ' எப்படியோ' தங் களை சட்ட பூர்வமாக இந்தியப் பிரஜைகளாக்கி வாக்குரிமையும் பெற்றுவிட்டார்கள் என்றார். '' இங்குதான் காசிருந்தால் எதையும் செய்ய லாமே?'' என்றும் இணைத்துக் கொண்டார் அவர்.

இவரது கருத்தை சினிமாப் பிரமுகர் ஒரு

## இந்தியாவிலிருந்து இந்திரஜித்

வரும் ஏற்றுக்கொண்டார். இன்றைய திகதியில் தமிழ் சினிமாவில் ஈழத்தமிழர்களின் பணம் கணிசமான முதலீடு செய்யப்பட்டுள்ளது. வியாபாரத்திலும் வெளிநாடுகளிலும் வாழும் ஈழத் தமிழர்களைக் கணிசமாக நம்பவேண்டியிருக்கிறது என்றார்அவர்.

ஊடகங்கள் கூட இலங்கை செய்திகளுக்கு குறிப்பாக விடுதலைப் புலிகள் தரப்புச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்றார் பத்திரிகையாளர் அமைப் பொன்றின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கும் ஒருவர். இந்த யதார்த்தத்தை சுட்டிக்காட்டிய பொலீஸ் அதிகாரி இலங்கையில் பிறந்த எம்.ஜி.ஆர். தமிழக முதல்வரானதும் அவருடன் விடுதலைப் புலிகள் நெருக்கமானஉறவைக் கொண்டிருந்தாலும் இந்த விடயத்தை மேலும் உறுதியாக்கியுள்ளது என்றார்.

ஆக மொத்தத்தில் மீண்டும் ஈழத்தமிழர் பிரச்சினை தமிழகத்தில் விஸ்வரூபம் எடுத்து வருகிறது என்றே தோன்றுகிறது.



மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் கடந்த 6ஆம் திகதி தமிழகத்திற்கு விஜயம் செய்தார். அங்கு தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி ம.தி.மு.க. தலைவர் வை.கோ. ஆகியோரை சந்தித்து உரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி, நாகேஸ்வரம்
# ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
# சுவர்க்கவாயில் ஏகாதசி விஞ்ஞாபனம்

மேற்படி விழா நாளை (10-01-2006) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு சுவர்க்க வாயில் தரிசனத்துடன் ஆரம்பமாகும்.

**தொடர் நிகழ்வுகள்**

10-01-2006 செவ்வாய்க்கிழமை காலை 8 மணி அபிஷேகம்
காலை 10 மணி வசந்தமண்டபப்பூசை
காலை 11 மணி எம்பெருமான் தேரில் எழுந்தருளி வீதிவலம் வருவார்.
மாலை 6 மணி சாயங்காலப் பூசை
நள்ளிரவு 12 மணி அர்த்தசாமப் பூசை
அதிகாலை 2 மணி 1008 சங்காபிஷேகம்
அதிகாலை 5 மணி தீர்த்தோற்சவம்

*செவ்வாய்க்கிழமை மாலை 6மணியிலிருந்து விஷேட கலை நிகழ்வுகள் இடம்பெறும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.*

நாகேஸ்வரம்,
அளவெட்டி. (44935)(26-11-45-42)

பொ.ப.சபை

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி கலாவதி ஜெகதீஸ்வரன்
(கலா)

மலர்வு 27.10.1961
உதிர்வு 05.01.2001
திதி: 09.01.2006 தசமி

அன்பு மகளே!
எத்தனை ஆண்டுகள்சென்றாலும்
உமது நினைவு எங்கள் மனங்களில்
நிறைந்திருக்கும் உமது ஆத்மா
சாந்திபெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

அரச வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (45125)(42-11-45-42)

என்றும் உமது நினைவில்
அப்பா, அம்மா குடும்பத்தினர்.

# O/L தகைமையுடன் இரண்டு வருடங்களில் TRINITY COLLEGE AND UNIVERSITY இனது கணினிப் பட்டதாரியாகுங்கள்
# B. Sc (Comp. Sc)

Semester 1, Semester 2 ஆரம்பம்
Semester 1இனை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள

**எமது கற்கைநெறியினுள் அமையும் பாடநெறிகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பயின்ற சான்றிதழ்களை சமர்ப்பித்தால், உங்கள் கற்கைநெறியினை Semester 2 இலிருந்து தொடரமுடியும்.**

தற்போது O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்கமுடியும்

O/L மாணவர்களுக்கான கணினிக் கற்கைநெறிகள் விசேட சலுகைக் கட்டணத்தில்

விற்பனைக்கு:
கணினி மேசைகள். P4 கணினி (2.4MHz) complete system, மற்றும் Air-condition

**NORTH LANKA**
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
பிரதான வீதி, சங்கானை ☎ 0214591647 0773583616

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

மண்ணில்
12
★
06
★
1932



விண்ணில்
10
★
12
★
2005

## அமரர் காசிப்பிள்ளை இராஜரத்தினம்

10.12.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் காசிப்பிள்ளை இராஜரத்தினம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (09.01.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(45147) (24-11-45-42)

இ.யோகமலர்
(மனைவி)

# சைவபரிபாலன சபை ஏற்பாட்டில் இந்துநாகரிக பாடத்தில் முன்னோடித் தேர்வு

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் இந்துநாகரிகம், இந்துசமயம் ஆகிய பாடங்களைக் கற்கும் மாணவர்களுக்காக யாழ்.சைவபரிபாலன சபையினரால் வருடாந்தம் நடத்தப்படும் முன்னோடித் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த முன்னோடித் தேர்வு எதிர்வரும் மார்ச் மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்றும் -

மேற்படி பரீட்சையில் தோற்றவிரும்புவோர் அதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் என்றும் -

வைச பரிபாலன சபையின் தலைவரும் சபையின் பரீட்சைச் செயலாளருமான கலாநிதி வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகளுக்குரிய விண்ணப்பப் படிவங்களை இதுவரை பெற்றுக்கொள்ளாத பாடசாலைகள் தம்முடன் தொடர்பு கொண்டால் உரிய படிவங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஆசிரியர்களுக்கான சம்பளத் திகதி அறிவிப்பு

2006ஆம் ஆண்டின் ஆசிரியர்களுக்கான சம்பளத் திகதி பற்றிய விவரம் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) கே.மகாலிங்கம் இது குறித்த சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

சம்பளத் திகதி வருமாறு:
ஜனவரி 20, பெப்ரவரி 20, மார்ச் 20, ஏப்ரல் 07, மே 15, ஜூன் 20, ஜூலை 20, ஓகஸ்ட் 21, செப்ரெம்பர் 20, ஒக்ரோபர் 20, நவம்பர் 20, டிசெம்பர் 20.

மேற்படி திகதிகளில் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## மாதகல் - பெரியவிளான் வீதி பலத்த சேதமடைந்த நிலையில்

மாதகலிலிருந்து பெரியவிளான் சந்தி வரை செல்லும் புனித அந்தோனியார் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது மக்கள் போக்குவரத்திற்குச் சீர்கெட்ட நிலையில் உள்ளது.

வயற் காணிகளுக்கு ஊடாக இந்த வீதி செல்வதால் விவசாயிகள் தங்கள் காணிகளுக்குச் சென்று வருவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை, இந்த வீதியில் வெள்ளம் வழிந்தோடுவதற்காக நிறுவப்பட்ட மதகும் கடந்த பல வருட காலமாகச் சேதமடைந்த நிலையில் உள்ளது.

எனவே, இந்த வீதியை விரைவில் புனரமைப்புச் செய்து தருமாறு மானிப்பாயிலுள்ள வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளரை மாதகல் விவசாயிகள் சம்மேளனம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகச் சம்மேளனத்தின் தலைவர் வி.சிற்றம்பலம் தெரிவித்தார். (எ-135)

## வடமராட்சியில் பட்டம் விடும் 'சீஸன்'

வடமராட்சிப் பிரதேசத்தில் பட்டம் விடும் சீஸன் ஆரம்பமாகியுள்ளது.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டம் விடுவதில் ஆர்வம் காட்டி வருவதுடன் ஆள் உருவம் உள்ளிட்ட பல்வேறு உருவ அமைப்புகளில் கட்டப்பட்ட பட்டங்கள் ஆங்காங்கே தாராளமாக பறக்க விடப்படுகின்றன.

சில பட்டங்கள் மின்குமிழ்களில் வர்ண வர்ண ஒளிஒளிர பறப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

பட்டம் விடும் சீஸன் உச்சக்கட்டமாக தைப்பொங்கல் தினத்தன்று பெரும் எண்ணிக்கையில் பட்டங்கள் பறக்க விடப்படுவது வழமையாகும். தமிழர்களின் பண்பாட்டியலில் தைப்பொங்கல் தினத்தில் பட்டம் பறக்க விடுவதும் ஒன்றாகும். (எ-173)

# தவற விடப்பட்ட நகை உரியவரிடம் ஒப்படைப்பு

வீதியில் கண்டெடுக்கப்பட்டு, சாவகச்சேரி மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டிருந்த தங்கநகை கடந்த வியாழனன்று உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையைச் சேர்ந்த பெண்ணொருவர் குறிப்பிட்ட நகையை ஆதாரங் காட்டியதையடுத்து மருத்துவமனைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச.பாலகுமார் நகையினை உரியவரிடம் கையளித்தார்.

கண்டெடுக்கப்பட்ட நகை சாவகச்சேரி மருத்துவமனையில் உள்ளது என்ற செய்தி உதயனில் பிரசுரமாகியிருந்தது. இதனைப் பார்த்த [illegible] ஆதாரம் காட்டி நகையினைப் பெற்றதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-117)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆவரங்கால் மேற்கு இந்து இளைஞர் மன்றம், விவேகானந்தா ச.ச. நிலையம், இந்து இளைஞர் வி.கழகம், முன்பள்ளி ஆகியவற்றின் தலைவரும் முழுநேர சமூக சேவையாளருமான

உயர்திரு.செல்லர் தவராஜசிங்கம்

அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு, அவரது சேவை நீண்டகாலமாகக் கிடைக்கவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

ஆவரங்கால் மேற்கு.
(45145) (24-11-45-42)

விவேகானந்த ச.ச. நிலைய நிர்வாகிகள்.

# UNIVAC
## Software Engineering Park

சிங்கப்பூர் "சிஸ்ரம் கொம்பியூட்டர்" நிறுவனம் வழங்கும் Software Engineering பயிற்சியும் வேலைவாய்ப்பும்! இதற்கான போட்டிப்பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி முடிவில் "சிஸ்ரம் கொம்பியூட்டர்" நிறுவன சான்றிதழ் வழங்கப்படுவதுடன் சிங்கப்பூரில் 800 டொலர் சம்பளத்துடன் அல்லது எமது பிரதேசத்தில் 10,000 ரூபா சம்பளத்துடன் வேலைவாய்ப்பும் வழங்கப்படும்.

**போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி 20-01-2006 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

213, Kasthuriyar Road, Jaffna T.P:077 6176476

# துயர் பகிர்கின்றோம்

*எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்*
*அமரர் கலாபூஷணம் வே.க.பாலசிங்கம்*
*அவர்கள் 05.01.2006 இல் சிவபதம் அடைந்த செய்தி*
*அறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.*
*அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

யா/தேவரையாளி இந்துக்கல்லூரி.
(ச/47269)(42-11-45)

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்,
பா.அ.சங்கம், பா.மா.சங்கம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தில் நீண்டநாள்
அனுசரணையாளராகவும் திருப்பணிச் சபை
பொருளாளராகவும் கடமையாற்றிய
இராமையாச்செட்டியார் முத்துலிங்கம் செட்டியார்
அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானம்.
(45126)(42-11-45)

ம.ஞானசேகரம்,
பரிபாலகரும், பூசகரும்.

# கண்ணீர் அஞ்சலி

## நடராஜா பாலேந்திரன்

03.01.2006 அன்று அகாலமரணமடைந்த எமது நண்பர் *நடராஜா பாலேந்திரன்* அவர்களின் பிரிவால் துயருறும் அவர் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**உசன் இளைஞர்கள்.**

(45140)(42-11-45)

# கண்ணீர் அஞ்சலி



*நுணாவில்குள கண்ணகை அம்மன் பக்தனும் கூட்டுப் பிரார்த்தனை சபையின் முன்னாள் நீண்ட கால அங்கத்தவரும் கண்ணகை அம்மன் ஆலய தீர்த்தக் கேணி அமைப்பில் முக்கிய பங்கு வகித்தவருமாகிய*

தம்பிராசா இராஜேந்திரம்
(பஞ்சு)

*அவர்கள் 30.12.2005 அன்று டென்மார்க்கில் அகால மரணமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த அனுதாபமடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்தியடைய நுணாவில் குள கண்ணகை அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.*

நுணாவில்குளம்,
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
(45091)(42-11-45)

நுணாவில்குள கண்ணகை
அம்மன் ஆலய
கூட்டுப்பிரார்த்தனை சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### வாகனம் விற்பனைக்கு

ஒருவரின் சொந்தப் பாவனையில் உள்ள டைகேஸ் மினிகப் ரக பெற்றோல் வாகனம் (Hy xxxx) ஒன்று விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் தினசரி பிற்பகல் 4 மணிமுதல் 6 மணிவரை. தொடர்பு: 27, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு. (45124)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப் பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 09.01.2006 திங்கட் கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளை களிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, நல்லூர் பாம் சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44844)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் பூர்த்தியடைந்த நல்ல இன ஜேர்மன் சிபேட் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: M.அரவிந்தன், நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கு. T.P.: 0776684793 (45137)

### விற்பனைக்கு

தனிப்பாவனையில் உள்ள வோக்ஸ் வேகன் (Volks wagon) கார் உடனடி விற் பனைக்குண்டு. தொடர்பு: 838, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (45149)

### வீடற்றவன் நாவல்

சி.வி.வேலுப்பிள்ளையின் வீடற்றவன் நாவலின் கதைச்சுருக்கம், விளக்கம், விமர் சனம், எல்லா வகையான இலக்கியங்களும் அடைத்த கலாபூசணம் அராலியூர் ந.சுந் தரம்பிள்ளை எழுதியது. இரண்டாம் பதிப்பு ரூபா 75/-. (45144)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.9

இலங்கை ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள வழிகாட்டல் கருத்தரங்கு எதிர் வரும் 11ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியா லயத்திலும் -

அதேபோல், அன்றையதினம் காலை 9 மணிக்கு கொக்குவில் இந்தக் கல்லூரியிலும் - நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் விடய ஆய்வு, நுண்ணறிவு, கல்விக் கொள்கை பற்றிய விரி வுரைகள் நிகழ்த்தப்படுவதுடன், கையேடு களும் வழங்கப்படும் என்று சங்கத்தின் செய லாளர் அ.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார்.(எ)

## உள்ளூராட்சிச் செயலர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கான கலந்து ரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவ லகத்தில் உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் தலைமையில் நடைபெற வுள்ளது. (எ-173)

### தேவை

தையல் வேலை செய்வதற்கு ஆண்கள்தேவை.
தொடர்பு:
**குமார் தையல் அகம்**
கே.கே.எஸ். றோட்,
தாவடி, 3ஆம் கட்டை, கொக்குவில்.
(45162) (24-11-45)

### HIGH SPEED INTERNET BROWSING

**நல்லைக் கந்தன் நெற் கபே**
OPEN : 9.00 a.m. TO 11.00 p.m.
62, வைமன் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2779
[47154]

### பாடசாலை வான் சேவைக்கு மாணவர்கள் தேவை

நவாலி, மானிப்பாய், தாவடி, பொற்பதி, கொக்குவில் ஊடாக அதி நவீன சொகுசு வான் மூலம் சிறுபிள்ளைகளுக்கான (ஆண்டு 2 வரை) இருக்கைகளுடன் கூடிய சேவை நடைபெறுகின்றது.
குறிப்பு: பொஸ்கோ, கண்டுக்குழி, சென். ஜோன்ஸ், British ஆகிய பாடசாலைகள் விரும்பத்தக்கது.
தொடர்பு: S.சுஜீதரன் (T.P.: 0773146048)
(45150) (24-11-45) அரசடி, நவாலி.

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

மலேசியா, டோகா, கட்டார், டுபாய் ஆகிய நாடுகளில் உடனடி வேலை வாய்ப்பு.

**ஒரு மாதத்தில் பிரயாணம்**

★ டோகா, கட்டார், டுபாய்
தச்சுவேலை, மேசன் வேலை, பார்பைன்டர்ஸ், எலக்ரீசியன், பிளம்பர், சாரதி, Office Boy, விமான நிலையத் துப்புரவுத் தொழிலாளர், பொதி சுமப்பினர் (PORTERS)
★ மலேசியாவில்
ஆண் / பெண் இருபாலருக்கும் பின்வரும் துறைகளில் வேலை வாய்ப்பு
சுப்பர் மாக்கட், கொம்பியூட்டர் கம்பனி, தையல் வேலை, பொது வேலை, துப்புரவுத் தொழிலாளர்
உதிரிப்பாக உற்பத்தியாளர்.
தொடர்பு: (சி/47274) (24-11)

**RAINBOW TROVELS and TOURS**
32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777328219, 021 222 3237

## ஆங்கில ஆசிரியருக்கு அஞ்சலி

### கனகருபசிங்கம் கமல்ஜித்



கமலவதனம் கொண்ட ஜித்தனே!
கனிவாய் ஆங்கிலம் கற்பித்த உன்னை
காலனவன் பறித்ததால்
கதிகலங்கி நிற்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்....
நெடுங்கேணி வ/பட்டிக்குடியிருப்பு
அ.த.க. பாடசாலை சமூகம்.
(45159) (24-11-45)

## உரவகை விற்பனை

எமது ஸ்தாபனத்தில் சகலவிதமான உரவகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும்பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.
தொடர்பு: **S.K. Agency**
128/D, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.
(45142) (24-11-45)

## குறிஞ்சிறேடர்

விசேட கழிவு ரூபா 2000/-

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு
"புஜாஜ்"மோட்டார் சைக்கிள்கள்
பல்சர்
டிஸ்கவர்
CT 100
ரூபா 2000/- கழிவுடன் ஒரு ஹெல்மட், ஒரு ஜக்கட்டும் இலவசம்.
இச்சலுகை 15-01-2006 வரையுமே உள்ளதால் உடன் கொள்வனவுசெய்து பயன்பெறவும்.
முச்சக்கரவண்டியும் [ஓட்டோ] விற்பனைக்கு உள்ளது.
டேவிட் பீரிஸ் மோட்டர் கம்பனிலிமிட்டட் அதிகாரம் பெற்ற விற்பனையாளர்.
இல.75 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(45152)(28-11-45-24)

## கண்ணீர் அஞ்சலி

யா/ வண்ணை நாவலர் ம.வி. இசை ஆசிரியை
திருமதி ஞா.ஜெகதீஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை
அமரர் **ஆறுமுகம் அருளம்பலம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
**இசை ஆசிரியர் கழகம்,**
**யாழ். கல்வி வலயம்.**
(45160) (24-11-45)

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 - 05 - 1944
உதிர்வு 19 - 12 - 1996



### அமரர் இராசம்மா சுப்பிரமணியம்

திதி: 09-01-2006

*அன்பே உருவாய்*
*பண்பே சிகரமாய்*
*பாசத்தின் இருப்பிடமாய்*
*பார்போற்றும் எம் தெய்வமே!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நிருவத்தம்பை,
உடுப்பிட்டி வடக்கு,
வல்வெட்டித்துறை
குடும்பத்தினர்.

## கணபதி கலாசார மண்டபம்

அத்தியடி, யாழ்ப்பாணம்.



மேற்படி மண்டபத்தில் திருமணம் மற்றும் விழாக்களை நடத்த விரும்புபவர்கள் யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோயில் காரியாலயத்தில் தினமும் காலை 7 மணிதொடக் கம் காலை 9.30 மணிவரை நேரில் தொடர்புகொள்ளவும்.
**- கோயில் நிர்வாகம்.**
(45134) (24-11-45)

## கலாநிதி பட்டம் பெற்றமைக்காக பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழக கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்
திருமதி
**ஜெயலக்சுமி இராசநாயகம்**
அவர்கள்
தஞ்சாவூர்
பல்கலைக்கழகத்தில்
கல்வியியல் துறை ஆய்வில்
ஈடுபட்டு கலாநிதிப் பட்டம்
பெற்றுள்ளார்.

அவர் தொடர்ந்தும் பல கல்விசார் ஆய்வுகளில் ஈடுபட்டு மென்மேலும் உயரவும், சேவைகள் தொடரவும் இறை வனைப் பிரார்த்தித்து உளப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்து கின்றோம்.
1999/2001 பட்டப்பின் கல்வி டிப்ளோமா,
மாணவர்கள் - யாழ்.பல்கலைக்கழகம்
(45132)(28-11-45-24)

## இணுவிலில்




ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்
**வாழும் கலைப்பயிற்சி**

நாள்:- 09.01.2006 திங்கட்கிழமை மாலை 5 மணி
பயிற்சி பற்றிய இலவச அறிமுகஉரை
இடம்:- சைவப்புலமனை, இளந்தொண்டர் சபை, இணுவில் கந்தசுவாமி கோயில், இணுவில்.
பயிற்சி நாள்கள்:- 10.01.2006 முதல் 15.01.2006வரை
பயிற்சி நேரம்:- மாலை4.30 மணிமுதல் 6.30 மணிவரை
மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0779059544,0776160214
www.artofliving.org (45118) www.srisriravishankar.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 29 ★ 04 ★ 1935
விண்ணில் 11 ★ 12 ★ 2005



### அமரர் கந்தையா கிருஷ்ணன் (அப்பையா)

(B.Sc., Dip. in Edu., F.I.F.A.)

முப்பத்தொரு நாளானாலும் முகம் மறைந்து போகுமா?
எப்போது நினைத்தாலும் உன் திருமுகமே கண்முன் வருகிறது
இப்போது இந்நாளில் ஆத்மசாந்தி பெற வேண்டி
முப்போதும் ஆண்டவனை இறைஞ்சி வணங்குகின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் மலர்வளையங்கள் வைத்து மலர்தூவி மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும் உள்ளூரிலும் வெளிநாடுகளி லும் இருந்தும் அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும் கிறிஸ்தவ மக்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வருக்கும் எமது ஆறாத்துயரிலும் பணிவன்புடன் நன்றி நவில்கின் றோம். அன்னாரின் சபிண்டிகரணக் கிரியைகள் நாளை (10.01.2006) செவ்வாய்க்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

துவாரகை,
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.
(45161) (24-11-45)
பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்து மண்ணில் நேற்று இலங்கைக்கு ஆறுதல் வெற்றி



இலங்கை - நியூஸிலாந்து அணிகளிற்கிடையிலான கடைசி ஒரு நாள் ஆட்டத்தில் இலங்கையணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து அணியை வீழ்த்தி ஆறுதல் வெற்றியைப் பெற்றது.

சமிந்தவாஸ் 48 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதில் நியூஸிலாந்து அணி 10 பந்துகள் மீதமிருந்த நிலையில் 253 ஓட்டங்களிற்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அத்தபத்து (69), சங்ககார (58), டில்சான் (43) போன்றோரின் உதவியுடன் 273 ஓட்டங்கள் என்ற இலக்கை 6 விக்கெட்டுகளை இழந்து எட்டியது.

274 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து, ஆரம்ப விக்கெட்டுகள் இரண்டையும் 13 ஓட்டங்களிற்குள் இழந்தது. அதன் பின்பு ஜோடி சேர்ந்த புல்ரன் (112), அஸ்ரில் (47) ஓட்டங்களைக் குவித்து அணியை சரிவில் இருந்து நிமிர்த்தினர். பின்னர் வந்த நியூஸிலாந்து வீரர்கள் கெய்ன்ஸ் (28), வெட்டோறி (3), பிராங்ளின் (2), வாஸின் பந்தில் அடுத்தடுத்து வெளியேறினர். மார்ஷல் (35), மக்கலம் (2) போன்றோரை ருச்சித பெரேரா வெளியேற்றினார்.

கடைசி விக்கெட்டாக மாட்டின் ஓட்டமெதுவும் பெறாது பெர்னான்டோவின் பந்தில் வெளியேற நியூஸிலாந்து அணி 253 ஓட்டங்களிற்குள் சுருண்டது. வாஸ் தான் வீசிய கடைசி இரு ஓவர்களில் மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இத்தொடரில் அத்தபத்து வென்ற நாணயச் சுழற்சியும் ஆட்டமும் இதுவே. இலங்கையணியில் மஹ்ருப்பிற்குப் பதிலாக ருச்சித பெரேரா இணைக்கப்பட்டார்.

இந்த ஆட்டத்தின் ஆட்ட நாயகனாக 4 விக்கெட்டுக்களை கைப்பற்றி வெற்றிக்கு வழிவகுத்த சமிந்தவாஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

நியூஸிலாந்து அணி ஏற்கனவே 4:0 என்ற ரீதியில் தொடரை வென்றுள்ளது. இந்ததொடரில் நடந்த இறுதியாட்டத்தில் இலங்கை அணி ஆறுதல் வெற்றியைப் பெற்றுள்ளது.

### நியூஸிலாந்து அணியின் ஓட்ட விவரம்

| | | | |
|---|---|---|---|
| வின்சென்ட் | C.முபாரக் | b பெரேரா | 5 (8) |
| பிளெமிங் | Lbw | b வாஸ் | 0 (2) |
| அஸ்ரில் | C.பெர்ணான்டோ | b பாண்டார | 47 (54) |
| புல்ரன் | run out | (டில்சான்) | 112 (131) |
| மார்ஷல் | C & | bபெரேரா | 35 (51) |
| கெய்ன்ஸ் | Lbw | b வாஸ் | 28 (27) |
| மக்கலம் | C.அத்தப்பத்து | b பெரேரா | 2 (4) |
| வெட்டோரி | | b வாஸ் | 3 (7) |
| பிராங்ளின் | | b வாஸ் | 2(6) |
| பொண்ட் (ஆ.இ.) | | | 2(2) |
| மார்ட்டின் | | b பெர்ணாட்டோ | 0 (2) |
| உதிரிகள் | | | 17 |
| மொத்தம் | | 10 விக்கெட்டுகள் | 253 |

| பந்து வீச்சாளர் | ஓவர்கள் | ஓட்டமற்ற ஓவர்கள் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|---|
| வாஸ் | 09 | 0 | 48 | 4 |
| பெரேரா | 10 | 0 | 56 | 3 |
| பெர்ணான்டோ | 5.2 | 0 | 36 | 1 |
| முரளிதரன் | 10 | 1 | 36 | 0 |
| பில்சான் | 04 | 0 | 20 | 0 |
| பண்டார | 10 | 0 | 47 | 1 |

### இலங்கை அணியின் ஓட்ட விவரம்

| | | | |
|---|---|---|---|
| உப்புல் தரங்க | C புல்ரன் | b மார்ட்டின் | 11(16) |
| முபாரக் | C மார்ட்டின் | b பொண்ட் | 26(32) |
| சங்ககார | C புல்ரன் | b அஸ்ரில் | 58(79) |
| டில்சான் | C மக்கலம் | b மார்ட்டின் | 43(54) |
| அத்தப்பத்து | | b பொண்ட் | 69(68) |
| ஜெயவர்த்தன | Cஅஸ்ரில் | b மார்ட்டின் | 30(41) |
| ஆர்னல்ட் (ஆ.இ) | | | 15(14) |
| வாஸ் (ஆ.இ) | | | 1(5) |
| உதிரிகள் | | | 20 |
| மொத்தம் | 6 விக்கெட்டுகள் | | 273 |

| பந்துவீச்சாளர் | ஓவர்கள் | ஓட்டமற்ற ஓவர்கள் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|---|
| பிராங்ளின் | 10 | 0 | 56 | 0 |
| பொன்ட் | 10 | 1 | 53 | 2 |
| மார்ட்டின் | 10 | 0 | 62 | 3 |
| வெட்டோரி | 10 | 0 | 44 | 0 |
| கெய்ன்ஸ் | 07 | 0 | 44 | 0 |
| அஸ்ரில் | 03 | 0 | 12 | 1 |


## அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்

மண்ணுலகு 05 - 10 - 1933



விண்ணுலகு 12 - 12 - 2005

### திருமதி முருகேசு கனியம்மா

12.12.2005 திங்கீட்கிழமையன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை *(10.01.2006)* செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முதலாம் குறுக்குத்தெரு,
இணுவில் வீதி, மானிப்பாய். (45166) (39-45-11) குடும்பத்தினர்.


## மலேரியா ஆய்வு பரிசோதனை

சாவகச்சேரி, கோயில்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுமக்களிடையே அண்மையில் மலேரியா ஆய்வு பரிசோதனை நடத்தப்பட்டது. இந்தப் பரிசோதனையில் 200இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். சாவகச்சேரி புனித பிகோரியார் தேவாலயச் சுற்றாடல், உதயசூரியன் வீதி, உப்புக் கேணி வீதி ஆகிவற்றைச் சேர்ந்த குடும்பங்களிடையே இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்.பிராந்திய சுகாதார திணைக்கள மலேரியா நோய் தடுப்புப்பிரிவினர் இந்த ஆய்வினை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## கொழும்புத்துறையில் பற்றைகளை அழிக்க படையினர் அறிவுறுத்து

கொழும்புத்துறைப் பகுதியில் வெற்றுக் காணிகளில் வளர்ந்திருக்கும் பற்றைகளை அழித்துத் துரப்புரவு செய்யுமாறு படையினர் பொதுமக்களை வற்புறுத்தி வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

கொழும்புத்துறை பிரதான வீதி மற்றும் சுவாமியார் வீதி போன்ற பகுதிகளில் வெற்றுக்காணியில் வளர்ந்திருக்கும் பற்றைகள் மற்றும் வீதியோரங்களில் படர்ந்து காணப்படும் மரக்கொப்புகளை வெட்டித் துப்புரவு செய்யுமாறு படையினர் கேட்டுள்ளனர்.

படையினரின் இந்த வலியுறுத்தலை அடுத்து மக்கள் தமது வெற்றுக்காணிகளில் வளர்ந்திருக்கும் பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (எ-17)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 14 - 01 - 1982



மறைவு 26 - 11 - 2005

### சிவகுமாரன் பார்த்தீபன் (தீபன்)

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (09-01-2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (45163) (45-11)

தகவல்:
இராசன் - மாமா.



சீட்டிழுப்பு இல. 1674



07.01.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

04 07 29 54 (08)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 300819042 இலிருந்து 300834239

சுப்பர் ஜக்பொட் பரிசு ருபா 75,20,150/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 75,20,150/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 23 | 5,000/- | 1,15,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 408 | 1,000/- | 4,08,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,321 | 500/- | 6,60,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,499 | 40/- | 7,79,960/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,320 | 20/- | 3,66,400/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,76,951 | 10/- | 27,69,510/- |
| மொத்தம் | 3,16,524 | | 70,99,370/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 75,99,370/- |

தொடர் இல. 200881363 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜனவரி 11 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 82,60,150/-

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் ரூபா 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கள் அடங்கிய பரிசு முறையை வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவை | 300820350-2-78 |
| கொழும்பு | 300819072-1-61 |
| கேகாலை | 300822155-8-22 |
| இரத்தினபுரி | 300819990-0-38 |
| குருநாகல் | 300819958-4-70 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செனிற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி கொழும்பு-03



## அகவை 81ஐக் காணும் அன்னையை வாழ்த்துகின்றோம்



*கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி*

### தங்கம்மா அப்பாக்குட்டி J.P.

(ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை)

எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய அன்னை (யே) அன்னையின் ஞான ஞால நாவசைய சைவத்தமிழ் உலகு அசைய நாங்களும் அசைந்து அன்னையின் பாதம் பணிந்து பாதம் பற்றி அன்னையின் குருவருளும் திருவருளும் பெற்று பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவே என்று ஏற்றிப் போற்றி வாழ்த்துகின்றோம்

K.N.சச்சிதானந்தன்,
'[illegible]'
(சி/47276) (45-11) பருத்தித்துறை.



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 744 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 06-01-2006 | செல்லுபடியாகும் தொடர் இல. 5913773-5928518 |

வெற்றி இலக்கங்கள்
04 28 38 43

லக்கினம் கும்பம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 10,00,000/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
ரூபா. 17,04,500/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,15,264 | 10/- | 31,52,640/- |
| 2.இலக்கங்கள் | 29,024 | 20/- | 5,80,480/- |
| 1.இல லக்கினம் | 28,792 | 30/- | 8,63,760/- |
| 2.இல லக்கினம் | 2,549 | 100/- | 2,54,900/- |
| 3.இலக்கங்கள் | 752 | 500/- | 3,76,000/- |
| 3.இல லக்கினம் | 79 | 5,000/- | 3,95,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 10,00,000/- | - |
| | | மொத்தம் | 60,22,780/- |
| முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 70,75,030/- |

மொத்த பரிசுத் தொகை ருபா. 70,75,030/-
தொடர் இல. 4015067 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 ஜனவரி 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 5917616-1-65 |
| இரத்தினபுரி | 5917840-3-87 |
| கொழும்பு | 5925834-2-95 |
| கம்பஹா | 5922454-6-64 |
| ஹம்பாந்தோட்டை | 5917105-9-94 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில மொழி மூலப் பாடநூல்கள் முழுமையாகக்கிடைக்கவில்லையாம்

வலி.வடக்கு.ஜன.9

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வேண்டிய பாட நூல்கள் முழுமையாக வழங்கப்படவில்லை எனப் பெற்றோர்கள் தெரிவிக்கின்றார்கள்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ,உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் மட்டுமே ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

இம் மாணவர்களுக்கு வேண்டிய பாட நூல்கள் கடந்த ஆண்டும் முழுமையாக வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் வலிகாமம் கல்வி வலயத்தில் சமூகக் கல்வி ,விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் ஆகிய பாடங்களுக்கான புத்தகங்கள் தரம் ஒன்பதுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள போதிலும் இரண்டு பாடப் புத்தகங்களில் ஒரு பாடத்திற்கான புத்தகம் வழங்கினால் மற்றப்பாடப் புத்தகம் இல்லையெனக் கூறி ஒரு புத்தகம் மட்டுமே மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட மாணவர்களுக்கு மட்டும் இத்தகைய துர்ப்பாக்கிய நிலமை வருடாந்தம் ஏற்பட்டு வருகின்றது எனப் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஒ-86)

## ஆலயங்களில் திருட்டு

நீர்வேலி குறுக்கு வீதியில் அமைந்துள்ள மாசிவன் மீனாட்சி அம்மன் ஆலயம், நீர்வேலி காளிகோயில் ஆகியவற்றுக்குள் நேற்று அதிகாலை 2 மணியளவில் புகுந்த திருடர்கள் விக்கிரகங்களை புரட்டி அவற்றின் கீழிருந்த ஐம்பொன் இயந்திரங்களையும் பக்தர்களால் வழங்கப்பட்ட பெறுமதி வாய்ந்த காணிக்கைப் பொருள்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை இவ்வீதியில் அமைந்துள்ள இரு தொலைத்தொடர்பு நிலையங்களிலும் திருட்டு நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஒ-72)

## படையினர் மறித்தனர்; மோ. சைக்கிளில் சென்றவர் வீழ்ந்தார்

மோட்டார் சைக்கிளில் மாம்பழங்கள் அடங்கிய பெட்டியை எடுத்துச் சென்றவர் படையினர் மறித்தபோது திடீரென நிறுத்த முயன்ற வேளையில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார். பெருமளவு மாம்பழங்கள் இதில் சேதமடைந்தன.

கடந்த வியாழக் கிழமை இச்சம்பவம் புத்தூர் வாதரவத்தையில் இடம்பெற்றது. மட்டுவிலைச் சேர்ந்தவரே இச்சம்பவத்தில் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-117)

## நல்லூர் வலய அதிபர்களுக்கு

நல்லூர் கோட்டக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளின் வசதிகள் சேவைக் கட்டணம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சபை, பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் கணக்குகள் உத்தேச வரவு - செலவுத் திட்டங்களை எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நல்லூர் கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு உரிய பாடசாலை அதிபர்களை நல்லூர்கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் கோரியுள்ளார். (ஒ-51)

## தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறி

மொரட்டுவ பல்கலைக்கழக தொழிலநுட்பவியல் நிறுவனத்தினால் தொழிநுட்பவியல் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மூன்று வருடங்களை முழுமையாகக் கொண்ட குடிசார் எந்திரவியல், மின்சார எந்திரவியல், இலத்திரன் தொலைத் தொடர்பு எந்திரவியல், இரசாயன எந்திரவியல், கடல்சார் எந்திரவியல், புடைவை ஆடைத் தொழிநுட்பம், பொறிமுறை எந்திரவியல், கப்பற்றுறை கல்வி, பல்பகுதிய தொழில்நுட்பவியல் ஆகிய 9 பாடங்களுக்குரிய விண்ண[illegible] பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் 24 வயதிற்குட்பட்டவர்களாகவும் ஜி.சீ.[illegible] தரத்தில் இணைந்த கணிதம், உயர்கணிதம், இரசாயனவியல், பெள[illegible] வியல் ஆகிய 4பாடங்களில் மூன்றில் சித்திபெற்றவர்களாகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதியான 31.01.2006 அன்று 20 வயதிற்கு குறைந்த விண்ணப்பதாரிகளுக்கு கப்பற்றுறை கல்வி தொழில் நுட்பவியல் பாட நெறிக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

விண்ணப்பங்களை 06.01.2006 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மாதிரிக்கு ஏற்ப தயாரித்து பணிப்பாளர், தொழில்நுட்பவியல் நிறுவனம் மொரட்டுவைப்பல்கலைக்கழகம், கட்டுப் பெத்த மொரட்டுவை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும் படிவேண்டப் படுகின்றனர்.

(ஒ-86)

ஓம்
ஸ்ரீராமஜெயம்



யாழ்.வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம்

10.01.2006 செவ்வாய்க்கிழமை

**விசேட நிகழ்ச்சிகள்**

*இரவு 8 மணி - 9.30 மணி* — மங்கள வாத்தியம் -தேவஸ்தான குழுவினர்
சு.மந்திரமூர்த்தி குழுவினர்

*இரவு 9.30 மணி- 11.30 மணி* — "வைகுண்ட ஏகாதசி"
(தெய்வீகப் பேருரை)
நிகழ்த்துபவர்
தமிழருவி த.சிவகுமாரன் B.A.(Hons)
தலைவர்
வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்கம்

*இரவு 11.30 மணி - பி.இ.ஒருமணி* — ஹரி பஜனை
தேவஸ்தான பஜனைக் குழுவினர்

*பின்னிரவு ஒரு மணி - 3மணி* — வில்லுப்பாட்டு
"சூடிக் கொடுத்த சுடர்க்கொடி"
நிகழ்த்துபவர்
கலைஞானச்சுடர், சிவநெறிக் கலாநிதி, மரபுக்கலைச் சுடர், கவிமணி, சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்
நகைச்சுவை: பொன் தர்மேந்திரன்
ஆர்மோனியம் : சி.இராமசாமி
மிருதங்கம்: ஸ்ரீ.நிதர்சன்
கடம்: நயினை விஜயன்

யாழ்ப்பாணம். -ஆதீன மஹாசபை.

(சி/47273)(26-11-45)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட எமது மதிப்பிற்குரிய யாழ்.மாவட்ட உத்தியோகத்தர் (கிராம அபிவிருத்தி)

**தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி**

(சமூகஜோதி)

அவர்களை கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் நலன் புரிச் சங்கம் சார்பாகப் பாராட்டி வாழ்த்துவதோடு அவருடைய சமூகசேவைகள் யாவும் தொடர்ந்து சிறப்புடன் ஆற்றிவருவதற்கு எல்லாம் வல்ல ஆண்டவன் அருள் பாலித்து ஆசீர்வதிக்க பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச்சங்கம்.**

(45157)(18-34-12)

## தமிழ் ஊடக அறிவியற் கல்லூரியின் நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு

* தமிழ் ஊடக அறிவியற்கல்லூரியின் நேர்முகத் தேர்வு புதனன்று நடைபெறும்.
* தமிழ் ஊடக அறிவியற் கல்லூரியின் சான்றிதழ் கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 11-01-2006 புதனன்று நடைபெறவுள்ளது.
* 11ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் இத்தேர்வு நடைபெறும். இக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்த அனைத்து விண்ணப்பதாரிகளையும் இதற்குத் தோற்றுமாறு கேட்கப்படுகின்றனர்.
* தனிப்பட்ட அழைப்புகள் எதுவும் அனுப்பப்படமாட்டாது

*தவிசாளர்,*
**ஊடக அறிவியற் கல்லூரி,**
**அறிவியல் நகர், கிளிநொச்சி.**

(சி/47275)(26-34-12-18)


**மனோகரா யாழ்ப்பாணம்**



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, த்ரிஷா, வடிவேல் நடித்த
**ஆறு**
தினசரி: பு.நே.10.30, 1.30, 4.30, 7.30,10.30
அதிரடி பொங்கல் வெளியீடு
(Dts நவீன ஒலிநயத்துடன்) **ஆதி**
இளைய தளபதி விஜய், திரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
தயாரிப்பு : S.A. சந்திரசேகர் தினசரி: பு.நே.10.30, 1.30, 4.30, 7.30
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : ரமணா
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

**நாகம்ஸ் சுன்னாகம்**
சிலம்பரசன் நடித்த
**தொட்டி ஜெயா**
தினசரி: புதியநேரம் 10.30, 2.30, 5.30

**நாதன்ஸ் யாழ்ப்பாணம்**
அர்ஜுன், நமிதா, வடிவேல்
**ஆணை**
காட்சி நேரம்:
10.30, 2.00, 5.15, 8.15



**ராஜா யாழ்ப்பாணம்**
உங்கள் சத்தியராஜ் (இருவேடம்)
சங்கவி,ஆனந்தராஜ் நடித்த
**[illegible] I.P.S**


## மரண அறிவித்தல்கள்

### திருமதி வத்சலை ஸ்ரீதரன் (ராணி)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வத்சலை ஸ்ரீதரன் (ராணி) அவர்கள் நேற்று (08.01.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கா.செ. ஸ்ரீதரனின் (இளைப்பாரிய வருமானவரி உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் சுரேந்திரனின் (கணிய அளவையியலாளர்) அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-பத்மாவதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆனந்தர்- இராசம்மா(பஞ்சவர்ணம்) தம்பதியரின் மருமகளும், கா.செ. சிவநாயகி, சுசீலை (சுதுமலை),சிவபாலன் ஆகியோரின் சகோதரியும் இராசதுரை, சிவசுப்பிரமணியம், ஸ்ரீகாந்தன் கமலாசினி(ராசாத்தி), ஸ்ரீஞானகுரு, பத்மலோசினி (பாப்பா) ஆகியோரின் மைத்துனியும் மனோகரன், ஆனந்த குலேந்திரன், மிதிலைச்செல்வி, கௌரி(ராணி) ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(08.01.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல்தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், ந[illegible]பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இளந்தாரி கோயிலடி,*
*இணுவில் கிழக்கு, இணுவில்.* (45174) (18-34-12)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி மேர்சி தங்கம்மா

திருமதி மேர்சி தங்கம்மா அவர்கள் நேற்று(08.01.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற டானியல் முருகேசு வேதநாயகம் அவர்களின் (ஓய்வுபெற்ற வைத்திய அலுவலர், யாழ்.) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வெற்றிவேல் - அன்னப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும் டானியல் முருகேசு - நேசம் தம்பதியரின் மருமகளும் டானியல் முருகேசு - நகுலாம்புசம் தம்பதியரின் மருமகளும் இராசரத்தினம் - சின்னத்தங்கம் தம்பதியரின் பெறாமகளும் வே.ஜேசுராஜரஞ்சன்(ஆதார வைத்திய சாலை, மந்திகை), தேவதாசன் சத்தியவதி, வே.யேசுவரன், தவராஜா (மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை), காலஞ்சென்ற தேவமோகன் கிருபை நேசகுமாரி, வே.சாமுவேல் நேசகுமார்(இலங்கைவங்கி, சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தாயும் புவனேஸ்வரி (தாதி உத்தியோகத்தர், மந்திகை), தேவதாசன்(காங்கேசன் வார் வேக்ஸ், கே.கே.எஸ்.), வசந்தி, தேவமோகன், றெனோ றெனிதா ஆகியோரின் மாமியும் ஆனந்தராஜா, சண்முகநாதன், செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(09.01.2006) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'அன்னம்'*
*சோனாவளவு,*
*வதிரி.* (சி-42279) (18-34-12)

**தகவல்:**
**வே.நேசகுமார்**
**(இலங்கை வங்கி சுன்னாகம் - மகன்).**

### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்கள் 07.01.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரி (மட்டுவில்), சந்திரசேகரம் (வவுனிக்குளம்), கிருஸ்ணலீலா(மட்டுவில்), வசந்தலாமலர்(அதிபர்- அம்பாள்புரம் தமிழ் வித்தியாலயம், வவுனிக்குளம்), சிறீசாந்தமலர்(முகாமைத்துவ உதவியாளர், யா/நாவற்குழி மகாவித்தியாலயம்), டெல்சி (மட்டுவில்), காலஞ்சென்ற கருணாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசையா(பத்ம ரஞ்சனா படமாடம்-சாவகச்சேரி), பத்மாவதி (வவுனிக்குளம்), தம்பிமுத்து(தீபன் தொலைத்தொடர்பகம், மட்டுவில்), கணேசலிங்கம் (தெல்லிப்பழை), ஜீவராசா, (அளவெட்டி) ஆகியோரின் பாசமிகு மாமனும் பவிராஜா, பரிஸ்னா, பகீரதன்(டோகா), பத்மரஞ்சினி, புலோமினா(யாழ். பல்கலைக்கழகம் ,4 ஆம் வருடம், கலைப்பீடம்), சதீஸன், றபீனா, டெசிந்தன், மேசினா(ஹொலண்ட்), பிரதீபன் (பிரான்ஸ்), அஜீபன்(**H.N.B. Assurance B.P.O**), சனுஷாந், குயின்ரன் ஆகியோரின் அன்புப் பேரனும் தயானி, விதுஷா, றெசினா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில்நேற்று (08.01.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.* (சி-42278) (18-34-12)

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் விசனம்

பொலீஸ் நிலையத்தில் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை படம் பிடித்துப் பிரசுரித்தமைக்காக படப் பிடிப்பாளரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்தமை, மகாராஜா கூட்டு நிறுவனத் தலைவருக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல், 'யாழ். தினக்குரல்' அலுவலகத்தில் இராணுவத்தினர் நடத்திய சோதனை நடவடிக்கை என்பன ஊடகவியலாளர்கள் மீது அரசினால் விடுக்கப்படும் அச்சுறுத்தல்களாகவே கருத வேண்டியுள்ளன எனத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஊடகத்துறை அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பான சில படங்கள் 'வீரகேசரி'யின் ஞாயிறு வார இதழ் முன்பக்கத்தில் பிரசுரித்தமை தொடர்பாக வீரகேசரியின் சிரேஷ்ட படப்பிடிப்பாளர் ஜோய் ஜெயக்குமார் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார். கைது செய்யப்பட்டு வெள்ளவத்தை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை படம் எடுத்தது எவ்வாறு? அல்லது படங்களை யாரேனும் வழங்கினார்களா? என்பன போன்ற பல்வேறுபட்ட வினாக்கள் ஜோய் ஜெயக்குமாரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கேட்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான கேள்விகள் பத்திரிகைத் தர்மத்திற்கும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் முற்றிலும் மாறானவை. இவ்வாறான விசாரணைகள் இடம்பெற்றமையை இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதுடன், குற்றப்புலனாய்வு பிரிவு அலுவலகத்திற்கு ஜோய் ஜெயக்குமார் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டமையானது ஊடகவியலாளர் மீது விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவும் ஒன்றியம் கருதுகின்றது.


இது போன்ற பல்வேறுபட்ட கைதுகள், விசாரணைகள் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மீது இடம்பெற்றிருக்கின்றன. அவை தொடர்பாக எமது ஒன்றியம் பல தடவை ஊடகத்துறை அமைச்சருக்குச் சுட்டிக்காட்டியிருந்தது. அது குறித்து இதுவரை எத்தகைய நடவடிக்கைகளையும் ஊடகத்துறை அமைச்சோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ எடுக்கவில்லை. இது தொடர்பாகவும் ஒன்றியம் கவலையடைகின்றது.

மகாராஜா கூட்டு நிறுவனத்தின் தலைவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிப்பதில் அரசாங்கம் காலதாமதத்தை ஏற்படுத்தியது. அவர்களுக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலானது ஊடகத்துறைக்கு - விசேடமாக தமிழ் ஊடகத்துறைக்கு - விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே ஒன்றியம் கருதுகின்றது. 'சிரச' - சக்தி ஆகிய ஊடகநிறுவனங்களின் தலைவராக அவர் விளங்குவதால் அந்தக் கொலை அச்சுறுத்தல் மிகவும் பாரதூரமானது. தமிழ் ஊடகத்துறையினர் மத்தியில் பல்வேறுபட்ட சந்தேகங்களையும், அச்சங்களையும் தோற்றுவித்துள்ளது.

அதேநேரம், 'தினக்குரல்' பத்திரிகையின் யாழ். பதிப்பு அலுவலகம் படையினரால் சோதனையிடப்பட்டிருக்கின்றது. இதுவும் தமிழ் ஊடகத்துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவும் எழுத்துச் சுதந்திரத்தை நசுக்க முற்படுகின்ற இனவாத நோக்கம் கொண்டது என்றே ஒன்றியம் சுட்டிக்காட்டுகின்றது. கடந்த சில வாரங்களுக்கு முன்னரும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'நமது ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயத்தையும் படையினர் சோதனையிட்டிருக்கின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஊடகங்கள் என்பதினால் படையினர் வேண்டுமென்றே இவ்வாறான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

இது தொடர்பாகவும் ஒன்றியம் ஊடகத்துறை அமைச்சரிடம் தொடர்புகொண்டு எடுத்துக் கூறி தமிழ் ஊடகத்துறை எதிர்நோக்குகின்ற அச்சுறுத்தல்களை நீக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டபோதும், அவ்வாறான ஏற்பாடுகள் எதுவும் இதுவரை இடம்பெற்றதாக இல்லை. பல தடவை கண்டன அறிக்கைகளைக் கூட ஒன்றியம் அமைச்சருக்கு அனுப்பியிருக்கின்றது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ளவேளை, அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் ஊடக நிறுவனங்களையும், ஊடகவியலாளர்களையும் படையினர் தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருகின்றனர். எனவே, சமாதானப் பேச்சுகளை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறும் அரசாங்கம், தமிழ் ஊடகத்துறை மீது சமீபகாலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் தொடர்பாக உரிய விசாரணை நடத்த வேண்டும் என ஒன்றியம் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றது - என்று உள்ளது.



கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இனம் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட இந்தியர் குருபிரசாத்தின் சடலம் நேற்று விமானம் மூலம் சென்னைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அங்கிருந்து அவரது சொந்த ஊரான ஆந்திர மாநிலம் நெல்லூருக்கு சடலம் எடுத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். எதிர்வரும் ஏப்ரல் மாதம் குருபிரசாத்துக்கு திருமணம் நடைபெறவிருந்தது. அத்துடன் இந்திய கிரிக்கெட் அணியில் விளையாடவும் அழைப்பு வந்திருந்தது.

## மன்னார் வளைகுடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில வாரங்களே இருக்கையில் இந்த விடயத்தை இலக்குவைத்து, தனியாக பெற்றோலியத்துறை அமைச்சு என்ற ஒன்றை உருவாக்கினார். இப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு, இந்த அகழ்வு வேலைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

ஆழ்கடல் எண்ணெய் அகழ்வில் உலகில் முன்னணியில் இருக்கும் நாடு நோர்வே என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் வடமேற்குக் கடலோரப் பரப்பில் எண்ணெய் அகழ்வு வேலைத் திட்டத்தில் இலங்கை - இந்தியா - நோர்வே கூட்டுச் செயற்பாடும் இடம்பெறும் என்றும் -

இதற்கான பூர்வாங்கப் பேச்சுகள் முடிவடைந்து விட்டன என்றும் -

ஒரு தகவல் தெரிவித்தது.

நோர்வேயின் புதிய பிரதமர், அண்மையில் புதுடில்லிக்குச் சென்றிருந்த சமயத்தில் இதுகுறித்து புதுடில்லியில் ஆராயப்பட்டதாகவும் கூறப்பட்டது.

தமிழர் தாயகத்தை ஒட்டிய பிரதேசத்தில் தமிழர் தரப்பின் இணக்கமின்றி இத்தகைய பணிகளைத் தொடங்குவது சிக்கல்கள் நிறைந்தது என்பதை சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் ஏற்கனவே உணர்ந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

எனினும், சேது சமுத்திரக் கால்வாய் அகலமாக்கும் திட்டத்துடன் இணைந்து இப்பணியும் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு ஓரளவு பாதுகாப்பு உண்டு என சில வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாம்.

இதற்கிடையில் -

இந்தப் பணியைக் கையாளும் இலங்கைத் தரப்பின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரியாக - பெருந்தொகை மாதாந்த வேதனத்துடன் - முன்னாள் கூட்டுப் படைகளின் தளபதியும், இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல நியமிக்கப்பட்டிருக்கின்றார். இந்த வேலையுடன் அதன் பாதுகாப்பு விவகாரம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டதாலேயே இத்தகைய ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இந்த விவாகரம் தொடர்பில் நேற்று 'உதயனு'க்குக் கருத்துத் தெரிவித்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகம, மன்னார் வளைகுடாவில் இந்த அகழ்வுகளை மேற்கொள்வதற்கான கேள்விமனுக்கள் கோரப்படவுள்ளன. ஆனால் அதற்கான கால எல்லை நிர்ணயிக்கப்படவில்லையென்றும்கூறினார்.

இது விடயத்தில் விடுதலைப் புலிகளிடமிருந்து எதிர்ப்பு வராதா என்று கேட்டபோது அதற்குப் பதலளித்த அவர், அவர்களுடன் இதுவிடயத்தை பேசுவது அரசின் பொறுப்பாக இருக்குமென்றும் கூட்டிக்காட்டினார்.

இவ்விடயத்தில் நோர்வேத் தரப்பு வெறும் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதோடு ஒதுங்கிவிடுமா அல்லது முழு அளவில் தன்னையும் ஒரு பங்குதாரராக இணைத்துக் கொள்ளுமா என்பது இதுவரை தெரியவரவில்லை. (க)

## பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். பண்டாரவளை, கொஸ்லந்த, அப்புத்தளை, வெல்லவாய பொலீஸார் இணைந்து நடத்திய இந்தத் தேடுதலில் சுமார் இருபது இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். பண்டாரவளைப் பொலீஸ் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்ட இந்த இளைஞர்கள் அங்கு வைத்து பொலீஸாரின் நீண்ட விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, மேற்படி தோட்டப்பகுதிகளில் கைக்குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன எனக் கிடைத்த தகவலொன்றை யடுத்தே இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டதாக ஊவா மாகாணப் பிரதிப் பொலீஸ் மா அதிபர் மிஸ்கின் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

என்றாலும், இந்தத் தேடுதலில் கைக்குண்டுகளோ, ஆயுதங்களோ மீட்கப்படவில்லையென்றும் பிரதிப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்திருக்கிறார். இதேவேளை, தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதியமைச்சருமான வடிவேல் சுரேஷ், ஊவா மாகாணசபை உறுப்பினர்களான எம். லோகநாதன், அ. அரவிந்குமார் ஆகியோர் கடுமையான கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

கைதான இளைஞர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை இவர்கள் நேற்று மேற்கொண்டிருந்தனர்.

விடுதலைப் புலிகள் ஊடுருவியிருக்கலாமெனச் சந்தேகம் கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை இரத்தினபுரியிலும் தேடுதல் நடத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

*(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)* (க)

## மூதூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவோடு இரவாக கிளிவெட்டிப் பகுதிக்கு இடம்பெயர்ந்தனர் எனக் குறிப்பிடப்படுகிறது. இந்தச் சம்பவங்கள் காரணமாக சுமார் 25 குடும்பங்களைச் சேர்ந்த 99 பேர் பாலையூற்று கிறிஸ்தவ ஆலயத்தில் தஞ்சம்புகுந்துள்ளனர் எனவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை இச்சம்பவம் குறித்த முழுமையான தகவல்களைப் பெறமுடியவில்லை. (க)

## தமிழக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக தனுஷ்கோடி முதல் பாம்பன் பாலம் வரை இந்த பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் பாம்பன் பாலத்துக்குக் கீழ் வாகனச் சோதனைச் சாவடிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படு கிறது.

இதேவேளை, தமிழக மீனவர்கள் மீது நேற்று அதிகாலை இலங்கை இராணுவம் மேற்கொண்டதாக்குதல் குறித்து தமிழக முதல்வர், பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அவசரக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார் எனவும் கூறப்படுகிறது. (க)

## ஏறாவூரில் குண்டுப் பீதி

ஏறாவூர் பிரதேசத்தில் குண்டுகள் வெடிக்க வைக்கப்படுமென தகவல்கள் கிடைத்துள்ளதால் பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்குமாறு இராணுவத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

ஏறாவூர்ப் பகுதி பள்ளிவாசல்களின் ஒலிபெருக்கிக் கருவிகள் மூலமாக பொதுமக்களுக்கு இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை இரவுத் தொழுகையின் பின்னர் இவ்வறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

ஏறாவூர் பிரதான வீதியிலுள்ள கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் குண்டுகள் வைக்கப்படலாமென தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் -

இவ்விடயம் குறித்து வர்த்தகப் பிரமுகர்கள் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் எனவும், சந்தேகத்திற்கிடமான நபர்களை மற்றும் பொருட்கள், கண்டால் தம்மிடம் தொடர்புகொண்டு அறிவிக்குமாறும் ஏறாவூர் பிரதேச இராணுவத்தினர் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

## வங்கக்கடலில் தாழமுக்கம்

வங்கக்கடலின் உட்பகுதியில் குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு நிலையம் நேற்று அறிவித்துள்ளது. இதன் காரணமாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படு மென்றும் கடலில் தொலைதூரத்தில் உள்ள இந்தக் காற்றமுத்த தாழ்வு மண்டலம் வலுவடைந்தால் மட்டுமே அது குறித்து சரியாக கணிக்க முடியுமென்றும் - தெரிவிக்கப்பட்டது.

(ஒ-6-13)

## விசேட..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைப் பிரிவினர் கொட்டகதெனியவின் வழிகாட்டலில் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

குழப்பத்தை ஏற்படுத்தும் 'பயங்கரவாதிகளுக்கு' எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விசேட உத்தரவுடன் அனுப்பி வைக்கப்பட்ட இந்த அணியினரே ஐந்து அப்பாவித் தமிழர்களையும் கொன்று தமது கைவரிசையைக் காட்டியிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

திருகோணமலையிலோ, மேலிடத்திலோ உள்ள பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தாமல் இந்த விசேட அதிரடிப் படை அணி விசேட உத்தரவுடன் அங்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பது இப்போது அம்பலத்துக்கு வந்திருக்கின்றது.

ஜனாதிபதியின் ஆலோசகர் பதவிக்கு நியமிக்கப்பட்டவர் தமது அதிகார எல்லைகளைத் தாண்டி இவ்வாறு படைக்குவிப்பு, நகர்த்தல் போன்ற செயல்களில் கையடிப்பது பாதுகாப்பு உயர் வட்டாரங்களில் பெரும் சர்ச்சைகளையும் குழப்பங்களையும் கூட உருவாக்கியிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் தற்போது அமைதி முயற்சிகளுக்கு கொஞ்சம் நஞ்சம் இருக்கும் வாய்ப்புகளையும் குழப்பியடிக்கும் விதத்தில் அரசின் பாதுகாப்புக் கொள்கை மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியன தொடர்பான விடயங்களில் - தமது எல்லை தாண்டி - அவர் பகிரங்கமாகக் கருத்து வெளியிடுவதும் அரசுக்குத் தேவையற்ற பல குழப்பங்களை உருவாக்கியிருப்பதாகத் தெரிகின்றது.

இந்த நிலைமை குறித்தும் தமது அதிகார செயற்பாட்டு எல்லையைத் தாண்டி ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் செயற்படக் கூடாது என்பது பற்றியும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ அண்மையில் கொட்டகதெனியவுக்கு நாசூக்காக ஆலோசனை கூறியிருக்கிறார் - எடுத்துக் கூறியிருக்கிறார் - என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு மற்றும் மலையகப் பிரதேசங்களில் தமிழர்களுக்கு எதிராகப் பெரும் கெடுபிடிகள், தேடுதல்கள், சுற்றிவளைப்புகள் என்பன இடம்பெறுவதற்கும் கொட்டகதெனியவே காரணம் என்றும் சில வட்டாரங்களில் சந்தேகம் தெரிவிக்கப்படுகின் றது. (க)


## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் தனபாலன்

(அளவெட்டி அரசினர் வைத்தியசாலை மருந்துக் கலவையாளர்)

காளையடி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கை, வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தனபாலன் அவர்கள் நேற்று (08.01.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தர்மலிங்கம் - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் நவரத்தினம் - நாகரத்தினத்தின் அன்பு மருமகனும் வடிவழகியின் அன்புக் கணவரும் கஜரூபன், சோபனரூபன், அஸ்வினி, யுகரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில். (சி-47282)(30)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org